ஸ்தோத்ரமாலா —ஸீரீஸ் நெ. க.

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான

ஸ்ரீகூரநாராயண ஜீயர் ஸ்வாமி

திருவாய் மலர்ந்தருளிய

ஸுதர்சநசதகம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

பதவுரை விசேஷவுரையுடன்,

மதுரை:

ஹரிஸமயதிவாகர அச்சுக்கூடத்தில்

அச்சிடுவிக்கப்பட்டது.

1926,

இதன் விலை 0—12—0 [போஸ்டேஜ் தனி.

பெருமாள் கோயில், பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர்.
(ஸ்தோத்ர, திவ்யப்ரபந்த-வ்யாக்ய்யாதா.)

Kumaran Press, Conjeeveram.

ஸ்ரீரஸ்து.



"ஜ்யோதிஷ்டோமேந யஜேத"

முன்னுரை.

திருவரங்கம் பெரிய கோயிலில் ஸ்ரீரங்க நாராயணஜீயர்ஸ்வாமி மடத்தில் அபிஷிக்தராக எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுள் ஒருவரான ஸ்ரீகாந்த நாராயணஜீயர் ஸ்வாமி திருவாய் மலர்ந்தருளிய ஸாதநஸாத்ய ந ஸாதகமென்னும் இந்த ஸ்தோத்ரம் ஸப்ரஸந்நஸ்ய மாதுர்யத்தாலும் அர்த்தஸௌஷ்டவத்தாலும் ஒப்புயர்வற்றதென்னுமிடம் ப்ரஸித்தமேயாம். ஸ்ரேயோர்த்திகள், ஐச்வர்யமும், ஆயுஸ்ஸு முதலிய பலன்களை விரும்புமவர்கள் ஸங்கல்பபூர்வகமாக இந்த ஸ்தோத்ர பாராயணம் செய்து இஷ்டப்ராப்திகளையும் அநிஷ்டநிவ்ருத்திகளையும் எளிதில் பெறுகிறார்களென்பதும் ஸர்வப்ரஸித்தம். அநந்யப்ரயோஜநர்களான ஸாத்விகர்களுக்கும் இந்த ஸ்தோத்ரம் நித்யாநுஸந்தேயமென்பதில் விப்ரதிபத்தி இல்லை.

ஆகவே, ஸர்வஜீவநமும் ஸர்வோபஜீவநமுமான இந்த ஸ்தோத்ரத்திற்குப் பொருள் தெரிந்துகொள்ளவேண்டியது அனைவர்க்கும் ஆவச்யகம். இதற்கு அதிஸங்க்ஷிப்தமான ஸம்ஸ்க்ருத டிப்பணி ஒன்றிருந்தாலும் ஸர்வஸுலபமான நடையில் தமிழுரையொன்று இருக்கவேண்டியது ஆவச்யகமேயாம். இங்ஙனே ஓருரை எழுதும்படியாகப் பலபெரியோர்கள் * பொருளல்லாதவென்னைப் பொருளாக்கி நியமித்தருளினமையால் அந்த நியமனத்தைச் சிரமேற்கொண்ட அடியேன் அஜ்ஞர்க்கும் ப்ராஜ்ஞர்க்கும் வாசியற உபகாரகமாம்படி உரையெழுதத் தொடங்குகின்றேன். நியமேந ப்ரதிபதார்த்தமும், ப்ரமேய தாத்பர்யமும், சப்த விசேஷார்த்தமும், இன்

றியமையாத இடங்களில் பதங்களின் வ்யுத்பத்திவிவரணமும், தே வையான புராண வரலாறுகளும் இதில் வரையப்படும்.

இரவிலும் விரைவிலும் எழுதுவதனால் நேரும் பிழைகளையும், மானிடரியற்கைக்குரிய அஜ்ஞாநாதிகளால் நேரும் பிழைகளையும் மற்றும் அச்சுப் பிழைகளையும் பெரியோர் பொறுத்தருளி, கேவலகுணக்ராஹிகளாக விளங்குவார்களென்று விஶ்வஸிக்கிறேன். அன்றி, குற்றங்குறைகளை எடுத்துக் கூறுவார் பக்கல் க்ருதஜ்ஞனாகவுமிருப்பேன்; அவை திருத்தவும்படும். நிற்க,

இந்த ஸுதர்ஶந ஶதக ஸ்தோத்ரத்திற்கு கர்த்தாவான ஸ்ரீ கூரநாராயண ஜீயர் ஸ்வாமி எக்காலத்தவர்? எவ்வாசிரியருடைய திருவடிஸம்பந்தி? இன்னும் என்னென்ன க்ரந்தங்களருளிச் செய்துள்ளார்? இத்யாதி விஷயங்களைப் பலர் விமர்சிக்கப் புகுந்து அவரவர் மனம்போனபடி பேசிப்போருவர். ப்ராமாணிகர்களான பெரியோர்பக்கல் கேட்டுணர்ந்ததை அடியேன் இங்கு ஸங்க்ரஹித்தெழுதுகின்றேன்;—இவர் கூரத்தாழ்வானுடைய காலத்திலே எழுந்தருளியிருந்தவரும், ஸாக்ஷாத் அவருடைய திருவடிகளிலே ஆஶ்ரயித்து ஸகலஶாஸ்த்ரங்களையும் கற்றுணர்ந்தவருமாவர்.

“கோயிலொழுகு” என்னும் க்ரந்தத்தில் “கூரநாராயணஜீயர் வைபவம்” என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டுள்ள சில பங்க்திகளை இங்கே உதாஹரிப்போம்:—“நஞ்சீயர் ப்ரவசநம் நிர்வஹித்துக் கொண்டிருக்கிற காலத்திலே, விண்ணப்பஞ் செய்வாரிலே ஒருத்தர் பெருமாள் ஸந்நிதிக்கு யோக்யமாகாமலிருக்க, ஆழ்வானுடைய தேவிகள் ஆண்டாள் அவரிடத்தில் க்ருபையாலே ஆழ்வான் திருமாலிருஞ்சோலையிலே எழுந்தருளியிருக்கச் செய்தே ஆழ்வான் திருவடிகளிலே ஆஶ்ரயித்து ஸந்ந்யஸித்து ஸர்வஜ்ஞராய் ஆசார்யன் குடியே நிரூபகமாகக் ‘கூரநாராயணஜீயர்’ என்று திருநாமத்தையுடையவராய் மஹாமாந்த்ரிகராய்க்கோயில்வாஸம் பண்ணிக்கொண்டிருக்கிறவரை அழைத்து, ‘உம்முடைய மந்த்ரங்களும் ஒரு கைங்கர்யத்திலே உபயோகிக்கும்’ என்று சொல்லியிருந்தீரே, நீர் இப்போது இந்த விண்ணப்பஞ் செய்வாரைப் பெருமாள் கைங்கர்யத்துக்கு யோக்ய

ராகும்படி பண்ணும்' என்று நியமிக்க, அந்த கூரநாராயணஜீயரும் ஸுதர்சநசதகத்தைப் பண்ணி, விண்ணப்பஞ்செய்வார் நோயற்றுப் பெருமாள் ஸேவாகாலத்துக்கு யோக்யராகும்படி பண்ணினார்''—என்று கோயிலொழுகில் எழுதப்பட்டுள்ளது.

ஈசாவாஸ்யோபநிஷத்பாஷ்யமியற்றினவரும் இந்த கூரநாராயணஜீயரேயென்றும். தைத்திரீயோபநிஷத்பாஷ்யமியற்றினவரும் இவரேயென்றும் சிலர் கூறுவதெல்லாம் ஆக்ஷேபகலிதமேயாம். ஸ்ரீவேதாந்ததேசிகனுடைய காலத்துக்குப் பிற்பட்டவராயும் அஹோபில மடாதிபதியாயுமிருந்த ஸ்ரீவத்ஸாங்க ஸ்ரீநாராயணமுநியென்பவரால் செய்தருளப்பட்டது ஈசாவாஸ்யபாஷ்யம். அந்த பாஷ்யத்தின் அவஸாநத்திலே ''வேதாந்தாசார்ய வர்ய ப்ரஸாதநிர்மலமதிநா । வாதிவேதாந்தஸாராயண: ஸ்ரீவத்ஸாங்கேந தேசிகேந:'' என்று அவர் தம்மாலே எழுதப்பட்டுள்ள ச்லோகமும் நோக்கத்தக்கது.

இனி தைத்திரீயோபநிஷத்பாஷ்யம் அருளிச்செய்தவரும் ஸுதர்சநசதக கர்த்தாவும் அபிந்நவ்யக்தியோவென்னில்; அன்று. ஸுதர்சநசதக கர்த்தா கூரநாராயணஜீயர்க்குப்பின் த்ருதீய பட்டஸ்தராக ஸ்ரீரங்கநாராயணஜீயர் மடத்தில் எழுந்தருளியிருந்தவரும், நலந்திகழ் நாராயணஜீயர் என்றும் ஸ்ரீரங்கராஜஜீயர் என்றும் மறுதிருநாமங்களையுடையவருமான ஸ்வாமியே தைத்திரீயோபநிஷத்பாஷ்யகர்த்தாவாவர். ஆகையாலே, ஸுதர்சநசதககாரரும் ஈசாவாஸ்யோபநிஷத்பாஷ்யகாரரும் தைத்திரீயோபநிஷத்பாஷ்யகாரரும் பரஸ்பரம் பிந்நபிந்நவ்யக்திகளென்று தெளியக்கடவது.

ப்ரதம கூரநாராயணஜீயர் ஸ்வாமியின் ப்ரபாவம் கோயிலொழுகில் சுருக்கமாகவும், ஸ்ரீரங்கநாராயணஸ்வாமி மடப்ரகாசிகையில் சிறிது விரிவாகவும் காணத்தகும். இவர் அறுபது திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார்.

இவர் மந்த்ரசக்திப்ரபாவத்தாலே அழகிய மணவாளனுக்குப்பல கைங்கர்யங்கள் நிர்வஹித்துப் போந்தாரென்றும், இவருடைய காலத்தில் 'யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாமஹோ மஹீயதே।

நத்ரவக்ஷ்யஞ்சரிஷ்யதி வ்யாயிந: ஸஹிதக்ஷதஸ்யார்:” என்ற ப்ரமாணம் ஸார்த்தமாகவேயிருந்ததென்றும் ஆசார்யர் அருளிச் செய்யக் கேட்டிருக்கை.

இவர் அருளிச்செய்த க்ரந்தங்களில் ஸாதுஶதகமொன்றே ப்ரஸித்தமாயிராநின்றது. கோயிலில் ஸ்ரீரங்கநாராயணஜீயர் மடத்தில் ஸ்வாமிவிக்ரஹமாக எழுந்தருளியிருக்கிற இவருடைய திவ்ய மங்கள விக்ரஹத்தின் ஸிம்ஹாஸநத்தில் நான்கு ஜீயர்களை எழுந்தருளப் பண்ணியிருக்கக் காண்கையாலே இவர்க்கு நான்கு ஜீயர்கள் ப்ரதாந ஶிஷ்யர்களாக இருந்தனரென்று தெரிகிறது. மற்றும் இவரது விஶேஷங்களை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

இந்த ஸாதுஶதகம் நிகமநஶ்லோகமுட்பட நூற்றொரு ஶ்லோகங்கள் கொண்டது. இதில், இருபத்திநான்காவது ஶ்லோகமளவும் ஜாஸவர்ணவ்ருத்தமும், அதற்குமேல் முப்பத்தெட்டாம்ஶ்லோகமளவும் தேஜிவர்ணவ்ருத்தமும், அதற்குமேல் ஐம்பதாம் ஶ்லோகமளவும் ஸாரவர்ணவ்ருத்தமும், அதற்குமேல் அறுபத்தோராம் ஶ்லோகமளவும் நாஸிவர்ணவ்ருத்தமும், அதற்குமேல் எழுபத்திநான்காம் ஶ்லோகமளவும் அக்ஷவர்ணவ்ருத்தமும், அதற்குமேல் நூறும்ஶ்லோகமளவும் வாராஹஷவர்ணவ்ருத்தமுமாய்ச் செல்லுகிறது.

“துஞ்சும்போதழைமின் துயர்வரில் நினைமின் துயரிலீர் சொல்லிலும் நன்றாம், நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு நாராயணாவென்னும் நாமம்” என்றாற்போலே ஸர்வது:க்கநிவர்த்தநக்ஷமமான இந்த ஸ்தோத்ரம் ஸர்வர்க்கும் ஸதாநுஸந்தேயமாகக் கடவது.

இங்ஙனம்:—

பெருமாள்கோயில், ப்ரதிவாதிபயங்கரம்,

அண்ணங்கரார்ய தாஸன்.

॥ ஶ்ரீ: ॥

ஶ்ரீரங்கராஜாய நம: ॥

ஶ்ரீகூரநாராயணமஹாமுநீந்த்ராநுக்ருஹீத

ஶ்ரீஸுதர்ஶநஶதகஸ்ய வ்யாக்யா ।

ஶ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கர அண்ணங்கராசார்ய விரசிதா ॥

தனியன்.

ரங்கேஶ விஜ்ஞப்தி கராமயஸ்ய
சகார சக்ரேஶ நுதிம் நிவ்ருத்தயே ।
ஸமாஶ்ரயேஹம் வரவாஞ்சிதப்ரதம் ய:
தம் கூரநாராயண நாமகம் முநிம் ॥

பதவுரை.

ய:—	யாவரொருகூரநாராயண ஜீயர்
ரங்கேஶ விஜ்ஞப்திகர ஆமயஸ்ய நிவ்ருத்தயே	திருவரங்கப்பெருமாளரையருடைய நோய் தீர்வதன்பொருட்டு
வரவாஞ்சிதப்ரதம்	அபேக்ஷிதங்களை நிறைவேற்றவல்ல
சக்ரேஶ நுதிம்	திருவாழியாழ்வான்விஷயமான ஸ்தோத்திரமாகிய ஶ்ரீஸுதர்ஶந ஶதகத்தை
சகார	அருளிச் செய்தாரோ
தம் கூரநாராயண நாமகம் முநிம்	அந்த ஶ்ரீகூரநாராயணஜீயர் ஸ்வாமியை
அஹம் ஸமாஶ்ரயே	அடியேன் பணிகின்றேன்.

கருத்து:—திருவரங்கப் பெருமாளரையர் திருமேனியில் நோவு சாத்திக் கொண்டிருக்கையில் அதுகண்டு ஸஹித்திருக்க . . . ஶ்ரீகூரநாராயண ஜீயர்ஸ்வாமி அந்த நோய்தீருவதற்காக ஶ்ரீஸுதர்ஶநாழ்வான் விஷயமாக நூறு ஶ்லோகங்கள் கொண்ட . . . த்தை யருளிச் செய்தார். இந்த ஸ்தோத்திரமானது . . . களையும் தலைக்கட்டித் தரவல்லது. இப்படிப்பட்ட ஸ்தோத்திரத்தை யருளிச் செய்த அந்த ஜீயர் ஸ்வாமியை அடியேன் தொழுகின்றே னென்கை............

ஸ்ரீ:

ஸுதர்சநசதகத்தின் அடிவரவு.

---

1. [illegible]

2. [illegible]

3. [illegible]

4. [illegible]

5. [illegible]

6. [illegible]

7. [illegible]

8. [illegible]

9. [illegible]

10. [illegible]

அடிவரவு முற்றிற்று.

ஸ்ரீரஸ்து.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீகூர நாராயண ஜீயர்ஸ்வாமி அருளிச்செய்த

ஸுதர்சநசதகம்.

ஸௌதர்ஶந்யுஜ்ஜிஹாநா
திஶி விதிஶி திரஸ்க்ருத்ய ஸாவித்ரமர்ச்சி:
பாஹ்யாபாஹ்யாந்தகார
க்ஷதஜகதகதங்காரபூம்நா ஸ்வதாம்நா ।
[illegible]
[illegible]
ஜ்வாலா ஜாஜ்வல்யமாநா விதரது
பவதாம் வீப்ஸயாऽபீப்ஸிதாநி ॥ ௧ ॥

ஸ்ரீ:

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர்
இயற்றிய பதவுரையும் விசேஷவுரையும்.

கூரநாராயணாபிக்யம் [illegible] ।
ஸ்ரீமத்ஸுதர்ஶநஸ்தோத்ர வ்யாக்யாதாரம் பஜே ॥

பதவுரை.

பாஹ்யாபாஹ்யாந்தகாரக்ஷத ஜகதகதங்கார பூம்நா } வெளியிலுள்ளதும் உள்ளுள்ளதுமான இருள்களாலே கெட்டுப்போன உலகங்கட்கு வைத்தியனாகும் பெருமையையுடைய

ஸ்வீயாந்தா	தனது ஒளியினால்
ஸாவித்ரம் ஶக்தி:	ஸூர்யனுடையதான ஒளியை
திரஸ்க்ருத்ய	கீழ்ப்படுத்தி
திஶி விதிஶி	எல்லாவிடங்களிலும்
உஜ்ஜிஹாநா	வியாபித்து விளங்குவதும்,
தோ: கண்டூதூந தைத்ய விதவயிதும் அலம் கண்ட ஸூத்ராண்யஶேஷா	புஜங்களிலுள்ள தினவினால் மிகவும் கொக்கரிக்கின்ற அசுரர்களின் பெண்டுகளுடைய கழுத்துகளை[த் தாலியற்றதாக] சூன்யமாக்குவதில் வல்லமை பெற்றதும்,
ஜாஜ்வல்யமாநா	ஒப்புயர்வின்றி ஜ்வலித்துக் கொண்டிருப்பதுமான
ஸௌதர்ஶநீ ஜ்வாலா	திருவாழியாழ்வானுடையதான ஜ்வாலையானது
பவதாம் வாஞ்சிதாநி	உங்களது விருப்பங்களை
பூயோ விதரது	அடிக்கடி தந்திடுக.

* * * இது முதல் இருபத்தினான்கு ஶ்லோகமளவும் திருவாழியாழ்வானுடைய ஜ்வாலையைப் பற்றின வர்ணனையாய்ச் செல்லுகிறது. அதில் இந்த ஶ்லோகத்தினால் சொல்லப்படுவது யாதெனில்;

உலகத்தில் இருள் இருவகைப்படும்; அகவிருள் என்றும் புறவிருள் என்றும். அகவிருள் அஜ்ஞாநாந்தகாரமெனப்படும்; புறவிருளென்பது ப்ரஸித்தமானதேயாம். இவ்விரண்டுவகையிருளாலும் தடுமாறுகின்ற உலகத்தவர்கட்கு அவ்விருளைத் தொலைத்தருளி வாழ்விக்கவல்ல வொளியினால் ஸூர்யனுடைய தேஜஸ்ஸைத் திரஸ்கரித்திருக்கும் ஸுதர்சந ஜ்வாலை. (ஸூர்யன் புறவிருளொன்றை மாத்திரமேயன்றோ போக்கவல்லன்.) அசுரர்களுக்கு எப்போதும் யுத்தம் செய்வதிலேயே உத்ஸாஹமாதலால் சண்டைக்கு யார் அகப்படுவார்களென்று அவர்களுடைய புஜங்கள் தினவுகொண்டு அதனால் அவர்கள் மிகவும் கொக்கரிப்பார்கள்; அன்னவர்களைத் தொலைத்து அவர்களது பெண்டிரைக் கைம்பெண்டாட்டிகளாக ஆக்கவல்லதுமான ஸ்ரீஸுதர்சந ஜ்வாலை உங்களுடைய அபீஷ்டங்களைப் பரிபூர்ணமாக்குக என்பதாம்.

ஸாஹஸ்ரப்ரதஸ்யஜயம்—ஸௌஹஸ்ரம் ஜிதத்விக்ஷப்ரத்வம்:. [உஜ்ஜிஹானா] 'ஒஹோஜ்ஜ்ஞமதேஷ' என்கிற பாடமானது உத் என்னும் உபஸர்க்கத்தை முற்கொண்டு ஹாநவ்ருத்யாயகமாயிருக்கிறது. ஸவிது: ஜகம்—ஸாவித்ரம். [பாஹ்யாத்யாதி] பாஹ்யாபாஹ்யாந்தகாராஸ்யாம் க்ஷதஸ்ய (பாயிதஸ்ய) ஜகத: சமலங்காரா: பூரீ (ஸௌபவம்) யஸ்ய தேந॥ "க்ஷமா ஸௌக்யஸ்ய க்ஷமா" என்ற பாடமும் ஏற்கும்; பொருள் ஒக்கும். க்ஷமா—ஸஹ்யமான என்றுமாம், ஸமர்த்தமான என்றுமாம். விஷயா—த்ராதவ்யா = பாலநீயா-விஷய:.

இந்த ஸ்லோகம் முழுதும் ஸ்ரக்தரா வ்ருத்தம்......... (க)

ப்ரத்யுத்யாதம் மயூகைர் நபஸி தினக்ருத: ப்ராத்ஸேவம் ப்ரபாபி:, பூமௌ ஸௌமேரவீபிர் திவி வரிவஸிதம் தீப்திபிர் தைவயாத்ரம் । பூயோ பூய: ஸ்புரத் ஸகலதிக் ப்ராந்த ஸாந்த்ர ஸ்புலிங்கம் ப்ராகாரம் ஜ்வாலா திக்ப்ரபந்தம் ஜய வ்ரஜதா பூஷ்யத் ॥ (உ)

பூமௌ	பூலோகத்தில்
ஸௌமேரவீபி: ப்ரபாபி:	மேரு பர்வதத்தினது காந்திகளால்
ப்ராத்ஸேவம்	ஸேவிக்கப் பெற்றதும் [னுல்
நபஸி	ஆகாசத்தில்
தினக்ருத:	ஸூர்யனுடைய
மயூகை:	கிரணங்களினுல்
ப்ரத்யுத்யாதம்	எதிர்கொண்டு உபசரிக்கப்பட்ட
திவி	ஸ்வர்க்கலோகத்தில் [தும்,
தைவயாத்ரம்	தேவர்களின் மாளிகைகளினுடைய (அல்லது) நக்ஷத்ராதி தேஜ: பதார்த்தங்களினுடைய
தீப்திபி:	ப்ரகாசங்களினுல்
வரிவஸிதம்	சிச்ரூஷை பண்ணப்பெற்றதும்
ஸகலதிக்ப்ராந்த ஸாந்த்ர ஸ்புலிங்கம்	ஸர்வதிக்குகளிலும் சுழன்று வியாபித்து நெருங்கின தீப்பொறிகளையுடையதும்

த்ரைலோக்ய விஜயவ்ரதம்	மூவுலகங்களையும் வெல்வதில் முயற்சியுடையதும்
(ஸுதர்சநம்)	
ஜாக்ரத் தாபம்	எப்போதும் விளங்காநின்ற தாப சக்தியையுடையதும்
உக்ரம்	(எதிரிகட்கு) பயங்கரமும்
சாக்ரம்	திருவாழியாழ்வானுடையதுமான
தத்	அப்படிப்பட்ட [ப்ரஸித்தமான]
தேஜ:	தேஜஸ்ஸானது
வ:	உங்களுக்கு
பூயஸே	மிகவும் அதிகமான
பூதயே	செல்வத்தின்பொருட்டு
ஸ்தாத்	விளங்குக.

* * * நான்காம் பாதத்திலுள்ள "த்ரைலோக்ய விஜய வ்ரதம்" என்ற விசேஷணத்தைப் பூர்வார்த்தமும் விவரிக்கிறது. "பாதக்ரமோபஸ்தக்ரமௌ ஸம்பவீயாந்" என்ற நியாயத்தை யடியொற்றி "பூமௌ ஸௌமேரவீபி: வ்யோமாபி: த்யாவதேவம்" என்று முதலில் யோஜிக்கப்பட்டது; "[illegible]" என்றிறே அடைவு.

பூலோகத்தில் மேருபர்வதத்தின் ஒளிகள் திருவாழியாழ்வானுடைய திவ்ய தேஜஸ்ஸுக்கு அடிமை செய்கின்றன வென்றது—மேருமலையின் நிரம்பிய ஒளிகளிற் காட்டிலும் மேம்பட்டு விளங்குவது ஸ்ரீஸுதர்சந தேஜஸ்ஸு என்றபடி. ஆகாசத்தில் இரவியின் கதிர்கள் எதிர்கொள்ளுகின்றனவென்றும், ஸ்வர்க்கலோகத்தில் தேவயோஷித்ஸ்த்ரீகள் சிச்ருஷை செய்கின்றனவென்றும் சொன்னதற்கும் அதுவே கருத்தாம். எனவே மூவுலகங்களிலும் உள்ள தேஜ:பதார்த்தங்களையெல்லாம் வென்று வீறுபெற்று விளங்குவது திருவாழியாழ்வானுடைய தேஜஸ்ஸு என்றதாயிற்று.

பின்னடிகளின் கருத்து ஸ்பஷ்டம். ஸுமேரோ: இமா:— ஸௌமேரவ்ய:, தாபி:. [தேவயோஷிதாம்] 'யோஷா' என்னும் பதம் த்ரு

ஹத்துக்கும் தேஜஸ்ஸுக்கும் வாசகமாகையாலே இரண்டுவகையான பொருள்களும் இங்கு விவக்ஷிக்கப்பட்டன. சதுர்த்தம் வஹ்நிஸ்ஸூர்யஸ் ஸுசந்த்ரஸ்ஸோமோ..... (௨)

ஸம்பூர்ணம் ஸம்பூர்ணஸுதாரஸாநாம் ஸாமஹதி லஸதஸோமபிம்பபாத்ரே, பாஹாஸ்ராவவ்ருதக்ஷிதிககநதிவஸ்ஸ்ரீகல்பத்ருமஸ்ய ஜ்யோதிஷ்டாம்ஸ்த்வாம் புஷ்பஸௌபாக்யஸ்ஸதாம் உத்ஸவதர்ஸநாத்யகம் ஸம்பூர்ண ஸ்ரீஹர்ஷிதா ஸவதாம் ஸம்ஹர்ஷக்ஷம் ஸ்ரீஹர்ஷாய ॥ (௩)

ஸுதாநாம் ஸ்யந்தைஃ	அம்ருதரஸ ப்ரவாஹங்களாலே
ஸம்பூர்ணம்	நிறைந்ததாயும்
ஸாமஹதி	மிக்க பெருமை பொருந்தியதாயிருக்கிற
ஸோமபிம்ப பாத்ரே	சந்திரபிம்பமாகிற பாத்திரியில்
லஸதஃ	விளங்காநின்றதாய்
பாஹாஸ்ராவவ்ருத க்ஷிதி ககந திவஃ	புஜங்களாகிற கிளைகளினாலே பூமியையும் ஆகாயத்தையும் ஸ்வர்க்கத்தையும் ஆக்கிரமித்ததாயுள்ள
ஸ்ரீகல்பத்ருமஸ்ய	திருவாழியாழ்வானாகிற கல்பவ்ருக்ஷத்தினுடைய—,
புஷ்பஸௌபாக்யதஃ	புஷ்பலக்ஷ்மியை விளக்குவதாயும் —தேவதைகளின் செல்வத்தை விளங்கச்செய்வதாயும்
ஸ்ரீஸௌதேவேஷு உத்ஸவலக்ஷ்மீம் ஸந்தநு	திங்மண்டலங்களில் ஸிரோபூஷணஸோபையைப் பெருக்காநின்றதாயுமுள்ள
ஜ்யோதிஸ்ஸுதர்ஸநஸ்ய	ஜ்யோதிஸ்ஸென்னும் தனிரானது
ஸவதாம்	உங்களுக்கு
ஸம்ஹர்ஷக்ஷம்	மேன்மைபொருந்திய
ஸ்ரீஹர்ஷாய	ஸந்தோஷத்தை
ஸ்ரீஹர்ஷதா	தந்திடுக.

* * * திருவாழியாழ்வானை ஒரு வ்ருக்ஷமாகவும் அவருடைய சோதியை ஜலமாகவும் ரூபணம் பண்ணிப்பேசுகிறார் இதில். உலகத்தில் வ்ருக்ஷமானது தண்ணீர் நிறைந்த பாத்தியில் விளங்கும்; சுற்றிலும் தழைத்தோங்குகின்ற கிளைகளையுடைத்தாயிருக்கும்; அத்தன்மை திருவாழியாழ்வானுக்கும் பொருந்தினபடி சொல்லுகிறது ப்ரதமபாதத்தில்.—அம்ருதவெள்ளம் நிறைந்த சந்திரபிம்பமாகிற பாத்தியில் விளங்காநின்றதாய்த்து ஸ்ரீஸுதர்ஶந வ்ருக்ஷம். சக்கரத்தாழ்வான் சந்திரமண்டலத்தில் விளங்குவதாகச் சொல்லுகிற விதற்குக் கருத்து என்னென்னில்; ஸுதர்ஶநயந்த்ரஸம்ஸ்தாநக்ரமம் சொல்லுமிடத்து ஸ்ரீஸுதர்ஶநாழ்வான் சந்திரமண்டலத்தில் எழுந்தருளியிருக்கும் வண்ணமாகச் சொல்லப்பட்டிருத்தலால் இங்ஙனே அருளிச் செய்யப்பட்டது. "சந்த்ரபிம்பஸ்ய மத்யஸ்தா தாரம் சக்ரஸ்த்ரோஹித:। தஸ்ய மத்யே ஶ்ரிதேவதேவம் ப்ரணவம் ஸுதர்ஶநம்"। என்று அஹிர்புத்ந்யஸம்ஹிதையில் இருபத்தாறும் அத்யாயத்தில் (ஶ்லோ-5) சொல்லப்பட்டதிறே. இந்த ஶதகந்தன்னிலும், மேல் 'ப்ரணவஶஶியாராயாரஷட்கோணவர்த்தி' என்றும் "சந்த்ராய: காரியதேஜோவஷீச" என்றும் "ஸ்வேதஶஶியாஸம் ப்ரத்யக்ஷநேத்ரநாஷட்க:" என்றுமருளிச் செய்திருப்பவை இங்கே ஸ்மரிக்கத்தக்கன. உலகத்தில் வ்ருக்ஷம் தண்ணீர் நிறைந்த பாத்தியில் விளங்குவதுபோல் இந்த ஸ்ரீஸுதர்ஶந வ்ருக்ஷம் ஸுதாப்ரவாஹஸம்பூர்ணமான சந்த்ரபிம்பமாகிற பாத்தியில் விளங்காநின்றதென்றதாயிற்று.

வ்ருக்ஷமானது சுற்றிலும் தழைத்தோங்காநின்ற கிளைகளினால் கீழும் மேலும் இடமடைத்துக்கொண்டு விளங்குவதுபோல் இந்த ஸுதர்ஶந வ்ருக்ஷம் தனது திருக்கைகளாகிற ஶாகைகளினாலே ஊர்த்வாத்யதிவிதிகளையெல்லாம் இடமடைத்துக் கிடக்கிறதென்கிறது இரண்டாம் பாதம். நீண்ட கைகளைக் கிளைகளோடு ஒப்பிடுதல் கவி மரபு. "சக்ரராஜத்ருமஸ்ய" என்றவிடத்து த்ரும ஶப்தம் ஸாமாந்யமாயிருந்தாலும் இங்கே கல்பவ்ருக்ஷமாகிற விஶேஷத்துக்கு வாசகமாகக்கடவது. அன்றியே, த்ருமாணாம் ராஜா — ராஜத்ரும:, சக்ரமேவ ராஜத்ரும: என்று வ்யுத்பத்தி பண்ணுவா

ரும் சிலருளர். வ்ருக்ஷத்தில் செந்தளிர் உண்டாகிறப்போல் இந்த ஸுதர்சந வ்ருக்ஷத்தில் செவ்விய சோதியே ப்ரவாளமென்கிறார். [ப்ரகடிதஸுமநஸ்ஸம்பத்] பல்லவமானது புஷ்பஸம்பத்தை விளக்குமே; அப்படியே இந்த ஸுதர்சந ஜ்யோதிஃ ப்ரவாளமும் செய்யா நின்றதென்பதை ச்லேஷரீதியாலே சொல்லுகிறார். ஸுமநஸ்ஸப்தம் புஷ்பத்துக்கும் தேவதைகளுக்கும் வாசகம். பல்லவமானது ஸுமநஸ்ஸுக்களான புஷ்பத்தின் ஸம்பத்தை ப்ரகடநம் செய்யும்; ஸுதர்சந ஜ்யோதிஃப்ரவாளமானது ஸுமநஸ்ஸுக்களான தேவதைகளின் செல்வத்தை ப்ரகடநம் செய்யா நிற்குமென்க. தேவர்களின் செல்வத்தைக் கொள்ளை கொண்டு அவர்களை நலிகின்ற அஸுரராக்ஷஸர்களை அழிக்கும் முகத்தால் ஸுதர்சநஜ்யோதிஸ்ஸானது தேவதாஸம்பத்ப்ரகடநகாரியாகிறபடி. [சூராங்கநாவேச உத்தம்ஸலக்ஷ்மீம் புஷ்ணந்.] மாதர்கள் பல்லவத்தை சிரோபூஷணமாகக் கொள்ளுவார்கள்; ஸுதர்சநஜ்யோதிஸ்ஸும் திங்முகங்களில் சிரோபூஷணமாக விளங்காநின்றதாய்த்து. திருவாழியின் சோதியானது திசைகள்தோறும் அழகிதாகப் பரவியிருக்கின்றதென்றபடி. 'சூரா'சப்தத்தின் ஸ்வாரஸ்யமும் நோக்கத்தக்கது.

இவைகளால் ப்ரவாளமென்னவமைந்த ஸுதர்சநஜ்யோதிஸ்ஸானது உங்கட்குச் சிறந்த மகிழ்ச்சியைத் தருகவென்றாராயிற்று. ... ... (௩)

சூராசாராத்ஸஹஸ்ராம்சுவஸாதி விததக்ஷேபதக்ஷாத்ரக்ஷா
த்ர், நாஸேஹ்ராஸ்தநாஸீநிர்ஜிஹவிஸவப்ரத்யுந்நஹத்பேசஸ்தேநத்:
க்ரூராயோபோககேணஃஸ்தோசஹீசேஹாசாயவீயஸ்யஹேதேஃ
தர்ஹா திக்ஷ்யசாநம் ப்ரதிஸ்ரஷ்டா ப்ரதாரஃ புஷ்யதாத்
பஸோஷாயுர்நர் ॥ (௪)

சாயவீயஸ்ய — எம்பெருமானுடையதான
ஹேதேஃ — திருவாழியினுடைய
யந்மஹஃ — யாதொரு தேஜஸ்ஸானது

ஸஹஸ்ராத் ஆராத்	ஆயிரக்கணக்கான அரஸமூஹத்தினின்றும்,
விஹதவிபக்ஷபக்ஷாத்	எதிரிகளைத்தொலைப்பதில் ஸமர்த்தமான
அக்ஷாத்	அக்ஷத்தில் நின்றும்
ஸாவித்ரஸநாபே:	ஸூர்யனோடு ஒத்த
நாபே:	நாபியில் நின்றும்
நிஜவிபவபரிச்சிந்நபூமே:	தனது பெருமையினாலே அளவிடப்பட்ட பூமியையுடைத்தான
நேமே:	நேமியில் நின்றும்
ஆராத் விஸர்பதி	எங்கும் பரவுகின்றதோ,
ஏககண்டை: ஆம்நாயை:	ஒருமிடறுன வேதங்களாலே
ஸ்துதமஹிம	துதிக்கப்பட்ட பெருமையையு[டையதும்
சதஸ்ருஷ்வபி திக்ஷு	நான்கு திசைகளிலும்
உத்யோதநம்	பரவுகின்றதுமான
தத் (தேஜ:)	அந்த ஸ்ரீஸுதர்சந தேஜஸ்ஸு
வ:	உங்களுக்கு
சதுர: புருஷார்த்தாந்	(அறம் பொருள் இன்பம் வீடென்னும்) நான்கு புருஷார்த்தங்க[ளையும்
புஷ்யதாத்	பெருக்கத் தந்திடுக.

* * *அரம், அக்ஷம், நாபி, நேமி—என்னுமிவை திருவாழியாழ்வானுடைய அவயவங்கள். அந்த அவயவங்கள் தோறும் கிளர்கின்ற ஜ்வாலையே ஸுதர்சந ஜ்வாலையாம். (அவயவஸமுதாயமே யிறே அவயவியாகிறது.) அதனுடைய புகழ் ஸகலவேதங்களிலும் பொலியும். அத்தகைய ஸுதர்சந ஜ்யோதிஸ்ஸானது அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களையும் உங்களுக்கு அளித்திடுக வென்கிறார்.

“ஆராதாராத்” என்ற இரண்டனுள் ஒன்று பஞ்சம்யந்தம்; ஒன்று அவ்யயம். அராணாம் ஸமூஹ:—ஆரம்; தஸ்மாத் என்று பஞ்சம்யந்தத்திற்கு வ்யுத்பத்தியாம். [illegible]. “ஶதம், ஸஹஸ்ரம்” இத்யாதிஸம்க்யாவாசக பதங்களை விசே

ஷணமாகவுடைய விஶேஷ்ய பதங்கள் பஹுவசநாந்தமாக இருக்கவேணும்; "ஶதம் பாத்ரா:, ஸஹஸ்ரம் பஶவ:" இத்யாதிகள் உதாஹரணம். இவ்விடத்தில் ஸஹஸ்ராத் அரேப்ய: என்றிருக்கவேணுமேயன்றி 'சக்ராத்' என்று ஏகவசநாந்தமாயிருத்தல் பொருந்துமோ வென்று விவிக்ஷை உண்டாகக்கூடியதே;

இதற்கு ஸமாதாநப்ரகாரங்கள் பலவுண்டு:—ஸஹஸ்ரஶ ப்தமாகவும் அரஸந்தோஹத்தில் ஸாக்ஷாத்தாக அந்வயிப்பதல்ல; ஸந்தோஹாவயவமான அரங்களில் அந்வயிக்கும்; ஸந்தோஹம் ஒன்றேயா கையாலே "சக்ராத்" என்ற ஏகவசநப்ரயோகம் கூடும் என்பர் சிலர். இங்ஙனன்றியே, ஸஹஸ்ரஶப்தம் ஸஹஸ்ராவய வபரமாய் அதன்மேல் 'அர்ஶஆத்யச்' என்றுகொண்டால் 'ஸஹஸ்ராவயவவிஶிஷ்டாத் அரஸந்தோஹாத்' என்றதாகிறது என்பர் சிலர்; இங்ஙனுமன்றிக்கே, நடாதூர் அம்மாளருளிச்செய்த பரத்வாதிபஞ்சகஸ்தோத்ரத்தில் "ஶ்ரீரங்கஸ்தலவேங்கடாத்ரிகரிகிரிஷ்வஷ்டோத்தரே ஸ்தாநே ராமநிகேதநேஷு ஸதா ஸாந்நித்யபாஜே" என்ற ஶ்லோகத்தில் "அஷ்டோத்தரே ஶதே ஸ்தாநேஷு" என்னாதே "ஸ்தாநே" என்று ஏகவசநப்ரயோகம் காண்கையாலே அப்படியே இங்கும் கூடும் என்பர் சிலர். இங்ஙனே நிர்வஹிக்கும் படிகள் பலகிடந்தாலும் ஹ்ருதயங்கமான நிர்வாஹம் ஒன்றுண்டு; அதாவது—அராணாம் ஸந்தோஹ: சக்ரம் என்று வ்யுத்பத்தி பண்ணாமல் 'அராணாம் ஸம்பத்தி: சக்ரம்' என்றுகொண்டு சக்ரபதத்தை விஶேஷணமாகவும் ஸஹஸ்ரபதத்தை விஶேஷ்யமாகவுங்கொண்டு "அரங்களினுடையதான ஆயிரத்தில் நின்றும்" என்று பொருள் கொள்ளுதல் மிக்கபொருத்தமுடையது. அரங்களினுடைய ஆயிரம் என்றால், ஆயிரம் அரங்கள் என்றே பொருள்படும்: "ஸஹஸ்ரம் காயாநாம் ப்ரஶோதந ஸந்திஷ்டதேநாத்" "வஸ்த்ராணாம் ஶதகேநாத்" இத்யாதிஸ்தலங்களில், ஸஹஸ்ரம் காயா:, ஶதம் வஸ்த்ராணி—என்று பொருள்படுமாறு காண்க.

இந்த ஶதகந்தன்னிலே "ஸந்தாநம் ஸந்தயம் வா ஶிவ ஶத்ரு ஶ்ருஶதி ஹாஸ்வராணாரோணாம்" என்ற ப்ரயோகமும்

இங்கே உத்ருஷ்டாங்கமாகப் பொருந்தும்; 'ஶரணம் உபைதி' = ஸஹஸ்ரம் ஶரணி என்றபடியிறே.

இனி இவ்வழிகளைத்தவிர வேறுவழியுமுண்டாகில் அறிவிற் சிறந்தோர் அங்ஙனே உபபத்தி சொல்லிக்கொள்க.

'ஶூரதா' என்ற ஶப்தம் "ஶூரா உதாரவீர்யயோ:" என்ற ஶப்தகோஶத்தின்படி சேய்மை அண்மை என்னுமிருவகைப்பொருளும் படும். நெடுந்தூரம் வரையில் என்று இங்கே பொருளாகக்கடவது. ஸமீபத்திலும் தூரத்திலும் என்றுமாம். "நிஜவிபவஸ்வபரிவிஸ்ருதேஶை:" என்ற நெறிவிசேஷணம்—ஸ்ரீஸாத்த்விகநெறி யானது பூமியிற்காட்டிலும் மிக்க விஸ்தாரமுடைய தென்னுமிடத்தைத் தெரிவிக்கும். "ஶூத்ரேய ரக்ஷணஸ்த்ததேஹி:" என்றும் பாடமுண்டாம். ... ... (ச)

ஶ்யாமம் ஶரீரவ்ருத்த்யா க்வசந ஸஹஜத: க்வாபி பிங்கம் ப்ரக்ருத்யா, ஶுப்ரம் ஶேஷஸ்ய பாஸா க்வசந மணிருசா க்வாபி தத்வேஷ ரக்தம் । நீலம் ஸ்ரீநேத்ரகாந்த்யா க்வசிதபி நிகமாந்த ஸ்வாத்மஜீவேஷ்வ விஸ்ராந்தம், வ்யாதநோதம் விதாநஶ்ரீர்யஸ்ய விநதாஸுத ஸம்ஸ்ப்ருஶாத ॥ (ரு)

க்வசந	ஓரிடத்தில்
ஸஹஜத:	எம்பெருமானுடைய
ஶரீரவ்ருத்த்யா	திருமேனி நிறத்தின் வ்யாப்தியி
ஶ்யாமம்	பசுமைநிறத்ததாயும் [னாலே
க்வாபி	ஓரிடத்தில்
ப்ரக்ருத்யா பிங்கம்	இயற்கையாகவே பிங்கள வர்ண
க்வசந	மற்றோரிடத்தில் [மாயும்
ஶேஷஸ்ய பாஸா	திருவனந்தாழ்வானுடைய ஒளியி
ஶுப்ரம்	வெண்ணிறமாயும் [னாலே
க்வாபி	மற்றுமோரிடத்தில்

ஶேஷஸ்ய	அந்தத் திருவனந்தாழ்வானுடை
மணிராகாத்	மாணிக்கவொளியினாலே [யிவே
ரக்தம்	சிவந்ததாயும்
க்வசிதபி	இன்னுமோரிடத்தில்
ஶ்ரீநேத்ரகாந்த்யா நீலம்	பிராட்டியினது திருக்கண்களின் காந்தியினாலே நீலநிறத்ததாயும்
	(இப்படி நாநாவர்ணங்கள் விரவப்பெற்றமையாலே)
ஶ்ரீஶயோர் தம்பத்யோ:	தம்பதிகளான பெரியபிராட்டியார்க்கும் பெரியபெருமாளுக்கும்
விசித்ரம் விதாநஶ்ரியம்	விசித்திரமான மேற்கட்டியின் ஶோபையை
ஸாந்த்ரா தந்வதிவ ஸ்பஷ்டம்	விசேஷமாக உண்டுபண்ணுகின்றதுபோன்றுள்ள
சக்ராத்மந:	திருவாழியாழ்வானுடைய தேஜ [ஸ்ஸானது
வ:	உங்களுக்கு
ஶர்ம வ்யாதநோது	ஸௌக்யத்தை வளரச்செய்திடுக.

கார்முகில் வண்ணனை எம்பெருமானுடைய திருமேனி யொளி யின்பரவுதலினால் சிலவிடங்களில் ஶ்யாமவர்ணமாயும், சிலவிடங்க ளில் இயற்கையாகப் பிங்களவர்ணமாயும், *அரவத்தமளியின் ஒளியி னால் சிலவிடங்களில் ஶுக்லவர்ணமாயும், அத்திருவனந்தாழ்வானு டைய திருமுடியில் விளங்குகின்ற மாணிக்கத்தின் ஒளியினால் சில விடங்களில் ரக்தவர்ணமாயும், குவளையங்கண்ணியான பிராட்டி யின் திருக்கண்ணொளியினால் சில விடங்களில் நீலவர்ணமாயும் இப் படி பலவகை வர்ணங்கள் விரவப்பெற்றிராநின்ற ஸுதர்ஶந ஜ்யோதிஸ்ஸானது பெருமாளும் பிராட்டியுமாகிற திவ்யதம்பதிகளு க்கு விசித்ரவர்ணமான மேற்கட்டி கட்டினதுபோல் விளங்காநின்ற தென்று ஒரு உத்ப்ரேக்ஷைதோற்றப் பேசினாராய்த்து. இப்படிப்பட்ட உத்ப்ரேக்ஷைக்கு ஆஸ்பதமான சோதியானது உங்கட்கு ஸுகத் தைத்தந்திடுக.

இதில், 'ஶ்யாமம்' என்றும் 'நீலம்' என்றும் இரண்டு பதங்கள் உள்ளன; "க்ருஷ்ணநீலாஸிதஶ்யாம காலஶ்யாமள மேசகா:" என்ற

அமரகோசத்தின்படி இரண்டையும் பர்யாயபதமாகக் கொள்ளும் அவர்கள் ஸாமாநாதிகரண்யம் ஸங்கிப்பார்கள். அங்ஙன் ஸங்கிக்கவேண்டா; அந்த அமரகோசந்தன்னிலே நாநார்த்தவர்க்கத்தில் "க்ருஷ்ணாம் ஹரிதக்ருஷ்ணா" என்றிருப்பது அறியத்தக்கது.* பாசியின் பசும்புறம் போலு நீர்மை இங்கே ஸ்யாமசப்தத்தால் விவக்ஷிதமென்க. [ஸஹஸ்ர] பதம் ஸ்ரீவாத்ஸல்யவர்ணத்தை ஸஹஸ்ரவர்ணமென்பார்கள். ஸா ஸ்ரீமந்நாராயணஜ்யோதிஸ்ஸின் இயற்கையானநிறம் இதுவாம். [சேஷஸ்ய] "சென்றால் குடையாம்" இத்தியாதிப்படியே ஸர்வாவஸ்தைகளிலும் கைங்கர்யநிஷ்டனா திருவனந்தாழ்வானுடைய வெண்மை. ஆத்யா தந்த்வஸாரூப்யமிறே அவனது. — ... (௫)

ஸம்ஸ்தந்தோத்தமஸ்வரூபஸ்ய ப்ரகாசகோ தேவகீ

ஸாரோ, ஜகந்நிவாஸ: ததைவ தீப்திரூபோ யோ ஜகத்தீர்த்தி

வஸந்தகால ப்ரயாதி விகஸத் சந்த்ரபிம்பா ப்ரகாசிதா, ராமாநுஜ

ரஸ்மி ஸுந்தரம் ஸர்வத்ர பூதமாத்ரநிவாஸ: || ராமா

ராமாநுஜ	திருவாழியாழ்வானுடைய தான
யா ரஸ்மிஸ்ஸ	யாதொருஜ்ஞாலைவரியானது
உதோஷிதவரஸ்ஸ்ய ஸாரஸ்ய:	சந்திரன் முதலிய மற்ற க்ரஹங்களினுடைய தேஜஸ்ஸைக்கவளீகரித்திருக்கின்ற ஸூர்யனுடைய
உதேஷ்ட ஸம்ஸ்கி	உதயத்தைத்தெரிவிக்கின்ற
ஸ்ஸந்த்யா	ப்ராதஸ்ஸந்த்யைபோல
உதோஷிதவரஸ்ஸ்ய: தேவாரோ:	இதர பதார்த்தங்களெல்லாவற்றினுடையவும் தேஜஸ்ஸை இல்லை செய்திருக்கிற எம்பெருமானுடைய ஸோமாஸ்ரயத்தை
உதேஷ்டம்	
ஸம்ஸ்கி	விளங்கச் செய்யாநின்றதாய்,
நக்தஞ்சரவிபயகரீ	இரவில் திரிகின்ற துஷ்ட ஜந்துக்களுடையவும் (2) ராக்ஷஸர்களுடையவும் நாசத்தைச் செய்யாநின்றதாய்

ஜக³த்³வந்த்³யா	எல்லாவுலகத்தாரும் உபாஸிக்கத் தக்கதாய்
ப³ந்தூ⁴காபா⁴ய ப³ந்தூ⁴ச்ச²வி ஸஹித ஸந்தோ³ஹஶோணைர்விதி	கோங்குமலர்களின் காந்தியோடொத்த காந்தியோடு சேர்ந்த ஶோவர்ணங்களினால் பெருக்கமுற்ற விளங்குகின்றதோ [தாய்
ஜ்யோ	
ஸா	அந்த ஸுதர்ஶந ஜ்வாலையானது
ப⁴வதாம்	உங்களுடைய
ப்ரத்யஹோத்த²ம் ஏந:	நாள்தோறுமுண்டாகும் பாபத்தை
ப்ரணுத³து	போக்கடிக்கவேணும்.

திருவாழியாழ்வானுடைய ஜ்வாலாவைசித்ரியை ப்ராதஸ்ஸந்த்⁴யையோடு ஒப்பிட்டுப் பேசுகிறார் ஶ்லேஷஶக்தியாலே. ஸந்த்⁴யையானது [உத்³பா⁴ஸிதப்ரதோ³ஷா ஸாஸ்வத: உந்மேஷம் ப⁴ம்ஸஶ்ரீ—] இதர தேஜ: பதா³ர்த²ங்களினுடைய ஒளியையெல்லாம் உள்ளடக்க வல்ல ஸூர்யனுடைய உதயத்தைத் தெரிவிக்குமாபோலே ஸுத³ர்ஶநஜ்வாலையானது [உத்³பா⁴ஸிதப்ரதோ³ஷ: கைடபா⁴ரேருந்மேஷம் ப⁴ம்ஸஶ்ரீ—] ஸூர்யாதி³வஸ்துக்களின் தேஜஸ்ஸையெல்லாம் திரஸ்கரிக்கவல்ல ஸ்ரீரங்கநாதனுடைய உந்மேஷமுண்டு-ஸுப்ரபா⁴த ஸமாதா⁴யம்; அதனை விளக்கா நிற்கும். [நக்தஞ்சரவிஜய ஶ்ரீ] இரவில் திரியும் க்ரூர ஜந்துக்களெல்லாம் ப்ராதஸ்ஸந்த்⁴யை வந்தவாறே உள்ளடங்கும்; நக்தஞ்சரர்களான அஸுரராக்ஷஸர்கள் ஸுத³ர்ஶநஜ்வாலையைக் கண்டவாறே நாஶமடைவர்கள்.

[ஜக³த்³வந்த்³யா] "ஸந்த்⁴யாமேயேநஶ:" என்று உலகெல்லாம் வணங்குமிறே அதை; இங்கும் "வடிவார் சோதிவலத்துறையுஞ் சுடராழியும் பல்லாண்டு" என்றாருண்டோ?

[ப³ந்தூ⁴காபா⁴யேத்யாதி³.] ப்ராதஸ்ஸந்த்⁴யாகாலத்திலே ஸூர்யனுடைய செவ்விய சோதிகள் எங்கும் பரவுகையாலே தாமஸிக ஶைவலராஶிகள் தமது கரிய நிறம் மாறிச் செம்மைபெற்று விளங்கும். ஆனபின்பு, ப³ந்தூ⁴கவ்ருக்ஷங்களின் சோதியோடொத்தசோதி

யாதொன்றுண்டு ப்ராஸாதிக ஸூர்யனுடைய சோதி, அதனோடு கலசிச் செவ்வியவாகி விளங்குகின்ற சைலசிகரங்களாலே நிபிட மாயிருக்கும் ஸந்த்யை; ரக்தாம்சுஸந்ததியும் இப்படியேயிராநின்ற றதாய்த்து;—பந்தூககுஸுமத்தின் சோதிபோன்ற சோதியையு டைய ஸூர்யகிரணங்கள் மற்ற ஸகல தேஜஸ்ஸுகளையும் திரஸ்கரித்துத் தாமே வீறுபெற்று எங்கும் பரவுகின்றமையால் காள மேகங்களும் தம் நிறம் கெட்டு இந்தச் செந்நிறத்தையே கொண்டன வாகி விளங்குதல்பற்றி, 'பிம்போஷ்டாய பிம்பாதரவிம்பிதங்களா ன பந்தூகங்களாலே ப்ரஹ்மஸ்ரீமத்தையாயிற்று' ரக்தாம்ஸுஸந் ததி. இத்தால், மேகங்களை சிவக்கடிக்கவல்ல சோதிப்பெருமை ஸூர்யகிரணங்களுக்கு உள்ளவாறு சொல்லிற்றாயிற்று. இப் படிப்பட்ட ஸூர்யஜ்யோதிஸ்ஸானது [ஸவதாம் ப்ரத்யஹா தாநதேந: ப்ரணாமந்து.] ஸந்த்யையோடு ஸார்த்தம் சொன்னது போலவே காயத்ரியிலும் ஸார்த்தம் திருவுள்ளம் பற்றுகிறார்; "தேந ஸாவாவா ஹஸ்ரஸ்ராம......யக்ஷாவஸோக்ஷத்ர...யக்ஷே ஊம ரிதம்ஹி...தஜ கவநம் த்மம்"என்று அது செய்யும் நித்யஸாவ நிபர்ஹணமாகிற காரியத்தையே இதுவும் செய்யக்கடவதென்கி றார். பிம்போக்தம் ஹாயா—பிம்போஷ்டாய, என்றாகும். "ஹாயாவாஹம்ஸ்வ" இதி வாணிநிஸூத்ரம்........

ஸார்த்தம் யஜ்ஞாவயவஜ்ஞா ப்ரகடயதி நஸஸ்தாரகாஜாலா காநி, ஸளரீஷ்டம் யாந்தி காந்தம் ஜிஹதி யதுஷயே தேவதாஸ்தாஸ் ஸஜஸ்ர | கஜீமத்ரீஸ்ச்ருத்யம் ஹஜதி திநநிஸாவஸூஸா ஊர்ஜ ஸாஸா, ஜாஸவதமவிய ஸ்த: ப்ரஹரணமதிஜம் யாமி ஸஸ்தோம் நாது || (எ)

யதுஷயஸமயே	யாதொரு ஸூர்யோதய ஜ்வாலை
	கிளருங்காலத்தில்
நஸ:	ஆகாசமானது

தூமஸ்தோமஸ்ய வ்யோம்நா — புகைத்திரளின் ஸமுதாயத்தோடு
ஸாம்யம் ப்ரகடயதி — ஒற்றுமையைத் தெரிவித்துக்கொள்ளுகின்றதோ,

தாரகாஜாலகாநி — நக்ஷத்ரஸமூஹங்களானவை
ஸ்பாலிங்கீம் காந்திம் யாந்தி — தீப்பொறிகளினது ஒளியை அடைகின்றனவோ,

மேரு: — மேருமலையானது
அங்காரஶங்காம் திஶதி — கொள்ளிக்கட்டையென்கிற ஶங்கையைத் தருகின்றதோ,

அக்நி: — அக்நியானது
ஸந்நார்சி: — ஒளிமழுங்கப்பெற்றதாய்
வைவர்ண்யம் பஜதி — (ஸுதர்ஶந ஜ்வாலையிற் காட்டில் வேறுபட்டு விளங்கமுடியாதபடி அத்தோடு) ஒற்றுமையை அடைந்துவிடுகிறதோ,

திநநிஶாவல்லபௌ — ஸூர்ய சந்திரர்கள்
தீப்திஹீநௌ — தேஜஸ்ஸை இழந்தவர்களாய்
ஜ்வாலாசக்ராவிவ ஸ்த: — ஜ்வாலையின் வட்டம்போல இருக்கின்றனரோ,

தத் — அப்படிப்பட்ட
ப்ரஹரணபதிஜம் தாம — திருவாழியாழ்வானிடத் துண்டான தேஜஸ்ஸானது

வ: புநாது — உங்களை ஸௌக்கியப்படுத்துக.

திருவாழியாழ்வானுடைய சோதி கிளரும்காலத்து மற்ற தேஜஸ்ஸுக்களெல்லாம் ஒளிமழுங்கி ஸவர்ணமாம் படியைப் பேசுகிறார் இதில். பலபல தேஜஸ்ஸுக்கள் நிறைந்து விளங்குகின்ற ஆகாஶமண்டலமானது சக்ரஜ்வாலையின் முன்னே ஒளிகெட்டு 'இது புகைக்கூண்டு' என்னும்படியான நிலைமையை அடைகின்றது; நக்ஷத்ர ஸமூஹங்களெல்லாம் 'இவை ஸ்புலிங்கமான நெருப்புப் பொறிகளாம்' என்னவேண்டும் நிலைமையை யடைகின்றன. மேருமலையானது 'இது அங்காரமோ' என்று ஶங்கிக்கும்படியாகின்றது. ஸூர்ய

உத்தரமான காஷ்டத்துக்கும் ஸூர்யஸம்பந்தமான காஷ்டத்துக்கும் நக்ஷத்ரமான காஷ்டத்துக்கும் ஸம்ஸாரமென்று பெயருண்டு. இவற்றுள் ஏதேனுமொரு பொருளை இங்கே கொள்க. ஸூர்யனானது தனது ஒளியெல்லாம் மழுங்கப்பெற்று ஸுதர்ஶநஜ்வாலையில் ஸம்ஸ்காரவத்தை அடையுமத்தனையொழியத் தானொரு தேஜ꞉பதார்த்தமாகத் தனித்து விளங்கப்பெறாது. இனி ஸூர்ய சந்த்ரர்களோ வெனில்; தங்களுடைய தேஜஸ்ஸு போனவழி தெரியாமல் ஒளியிழந்து, சிறுவர்கள் மாவலியாடும்போது தீவட்டம் காணப்படுமே அதுபோலவாகாநின்றார்கள்.

இப்படியாலே ஸகல தேஜ꞉பதார்த்தங்களையும் உருவழித்து எங்கும் மேம்பட்டு விளங்காநின்ற ஸுதர்ஶந ஜ்யோதிஸ்ஸானது உங்களை மகிழ்விக்கவேணுமென்றதாயிற்று.

[ஜால்யா] ஜாலாநாம் ஸமூஹ꞉—ஜால்யா. தத்திதப்ரகரணத்தில் "பாஶாதிப்யோ ய꞉" என்ற ஸூத்ரமும் இதற்கு நிர்வாஹகம். பாஶ்யா, த்ருண்யா, வந்யா, வாத்யா, கஜ்யா இத்யாதிவத். "தாரகாஜாலகாநி" = நக்ஷத்ர ஸமூஹங்களென்று பொருள்கொண்டால் ஜாலஶப்தாத் ஸ்வார்த்தே கப்ரத்யய꞉ என்று கொள்ளவேணும்; அன்றியே, "க்ஷாரகோ ஜாலகம் க்லீபே கலிகா கோரக꞉ புமாந்" என்ற அமரகோஶத்தின்படி பொருள் கொண்டால், 'புதிய அரும்புபோன்ற நக்ஷத்திரங்கள்' என்று கொள்ளலாம். ஸூக்திஜ்ஞாநாதீயம்—ஶௌஜ்ஞீ. ... ...(௭)

த்ருஷ்டேஸ்மிந் சக்ரே விகசநவஜபாஸந்நிகாஶே ஸகாஶே,
ஸ்வஸ்தாநஸ்தாநமேஷ ஸ்புடதிதி கலயந் நாபதோ
பேமதோऽஸ்ய நிஷ்டேவ யேந ப்ரவ்ருத்தோ வியத்யேவ ஸஹ
ஸாஶ்வம் ஷட்ஜ்யோதி நேமே, ஸத்ராம்ஶம் தே ஸத்ருக்ஷ꞉
ஹிதவிஹதயே பாநவோ பாஸ்வரா வ꞉ ‖ (௮)

விகசநவஜபாஸந்நிகாஶே சக்ரே } அப்போதலர்ந்த ஜபாபுஷ்பத்தோடொத்த திருவாழியாழ்வான்

அபிவ்யோம்நி த்ருஶ்யே ஸதி	ஆகாசத்தில் காணப்பட்டவளவில்
ஸ்வர்பாநு:	ராஹுவானவன்
“ஏஷ: ஸ பாநு: ஸ்புடம்” இதி அவயந்	“இதோ தென்படுகின்ற இப்புருஷன் ஸூர்யனேயாவன்” என்று நினைத்தவனாய் [ப்ரமித்தாலே]
வேகத:	வேகமாக
அஸ்ய ஸகாஶமேத:—	இத்திருவாழியாழ்வானுடைய அருகே வந்தவனாய்

(அவ்வளவில்)

யேப்ய:	எந்த ஸூதர்ஶநகிரணங்களினாலே
நிஷ்டப்தஸ்ஸந்	மிகவும் தபிக்கப்பட்டவனாகி
நிவ்ருத்த:	திரும்பிப்போனவனாய்
அத்யாபி	இன்றளவும்
ஸூர்யம்	ஸூர்யனை
விதுமிவ	சந்திரனைப்போல
ஸஹஸா ஸ்ப்ரஷ்டும்	சீக்கிரமாகத் தொடுவதற்கு
நேஷ்டே	அஸமர்த்தனாயிராநின்றானோ,
தே	அப்படிப்பட்ட
ஶாஸ்த்ரா: ஶாநவ:	மிக விளங்குகின்ற ஸூதர்சநகிரணங்களானவை
வ:	உங்களுடைய
அஹிதவிஹதயே	ஶத்ருவிநாஶத்தின் பொருட்டு
ஸந்து	ஸமர்த்தங்களாயிடுக.

உலகத்தில் ஸூர்யக்ரஹணம், ஸோமக்ரஹணம் என்ற இரண்டனுள் ராஹுவுக்குச் சந்திரன் பிடிபடுவது சீக்கிரமாகவும் ஸூர்யன் பிடிபடுவது விளம்பமாகவும் நிகழ்வது வழக்கம்; இதற்கு ஒரு ஹேதுவை உத்ப்ரேக்ஷிக்கிறமுகத்தாலே ஸுதர்ஶநஜ்யோதிஸ்ஸின் ப்ரதாபாதிஶயத்தைப் பேசுகிறார். அப்போதலர்ந்த ஜபாபுஷ்பம்போல் செக்கச்செகவென்றிராநின்ற திருவாழியாழ்வானை ஒருகால் ஆகாஶத்திலே கண்ட ராஹுவானவன் ‘இதோ ஸூர்

யன் கிடைத்துவிட்டான்; இவனைப் பிடித்துக்கொள்வோம்' என்றெண்ணி ஸூர்யப்ராந்தியாலே ஸுதர்ஶநாழ்வானருகே விரைந்தோடிவந்தானும்; உண்மையில் அந்த வ்யக்தி ஸூர்யனல்லாமல் திருவாழியாழ்வானுயிருந்தபடியாலே அவருடைய கிரணங்களாலே நன்கு தபிக்கப்பட்டு மீண்டொழிந்தவனான அந்த ராஹுவானவன் அதற்குப் பிறகு மெய்யான ஸூர்யனிடத்தில் போவதற்கும் அஞ்சி 'இவன் ஸூர்யனேயாவன்' என்கிற நிஶ்சயவிஷயமான நிஶ்சயத்தைப் பெற்றபின்பே இவனருகே போகலாமென்றெண்ணி, சந்திரனை எப்படி ஶீக்ரமாகப் பிடிக்கிறானோ அப்படி ஸூர்யனைப் பிடிக்கமாட்டாமல் விளம்பியாநின்றானென்று ஹேதூத்ப்ரேக்ஷையிருக்கிறபடி. எனவே, ராஹுவுக்கு ஸஹ்யமான ஸூர்யப்ரதாபம்போலன்றிக்கே ஸுதர்ஶநப்ரதாபம் அவனுக்கு ஸுதராமஸஹ்யமாயிற்றென்றதாய்த்து. இப்படி ஸூர்யனிற்காட்டிலும் அதிஶயிதப்ரதாபராய் விளங்காநின்ற திருவாழியாழ்வானுடைய கிரணங்களானவை உங்களுடைய பகைவர்களைப் பாற்றவேணும்.

ப்ராந்த்ரி—அபிப்ராம இதி விஶக்த்யேடைர்வ்யயீபாவ:. ஜவா = செவ்வரத்தை. நிஶ்ஶேஷம் யதா ததா தக்த: நிஷ்டப்த:. (அ)

தேவம் ஹேமாத்ரிஶ்ருங்கம் ப்ருதுபுஜஶிகரம் பிப்ரதம்
மத்யதேஶே, நாபீத்வீபாபிராமம் ரவிவிதுநயநம் ஶேஷஶீர்ஷோப
தாநம் । தேவீம் பத்மாயதாக்ஷீம் திநகரகிரணாத்யக்ஷவீஜ:
பரீத்ய, க்ருத்யே வஸ்த்ராவாஸாத இவ விஹஸநஸ்த்ர திவ்யா
ஸ்த்ராஸ்த்ர: ॥ (கூ)

ப்ருதுபுஜஶிகராந் — பருத்த புஜங்களாகிற சிகரங்களை யுடையனாய்

ஹேமாத்ரிஶ்ருங்கம் — மேருமலைபோல் உயர்ந்தவனான

தேவம் — ஸுதர்ஶநபுருஷனை [ருப்பதும்

மத்யதேஶே பிப்ரதம் — நடுவிடத்தில் வைத்துக்கொண்டி

நாபீத்வீபாபிராமம் — நாபியாகிற தீவினாலே அழகிதாயி ருப்பதும்

அராடவீமத்யே — அரங்களாகிற காடுகளையுடையதும்

ஶேஷஶீர்ஷாஸநஸ்தாம் — திருவனந்தாழ்வானுடைய முடியாகிற ஆஸநத்தின்மீது இருப்பதும்

(அந்யாம்) பூம்யந்தரமூர்த்திம் — பூமியின் வேறொரு வடிவுடைத்ததுமான [மூர்த்தியோடொத்த]

நேமிம் பரீத்ய — நேமியைச்சுற்றி

விபாந்தீ — விளங்கிக்கொண்டிருக்கிற,

திநகர கிரணாத்ருஷ்ட ஸீமா: } ஸூர்யகிரணங்கள் கண்டறியாத ப்ரதேஶத்தையுடைய[எல்லையையுடைய]
சக்ரவாளாசல இவ ஸ்தித: } லோகாலோக பர்வதம் போன்ற

திவ்யாஸ்த்ராக்நி: — ஸ்ரீஸுதர்ஶநஜ்வாலையானது

வ: — உங்களுக்கு

ப்ரீத்யை ஸ்தாத் — ப்ரீதியின்பொருட்டு ஆயிடுக.

திருவாழியாழ்வானுடைய நேமியைச் சுற்றி அவருடைய ஜ்வாலை விளங்கும்படியைப் பார்த்தால் பூமியைச் சுற்றி லோகாலோக பர்வதம் விளங்குவதுபோல் உத்ப்ரேக்ஷிக்கலாம்படி யிருக்கையாலே அங்ஙனே உத்ப்ரேக்ஷித்துப் பேசுகிறார் இதில். நேமியை மூர்த்தியாக ரூபணம் பண்ணுவதற்கு இன்றியமையாத உபபத்திகள் பூர்வார்த்தத்திலே சொல்லப்பட்டன. "திநகரகிரணாத்ருஷ்ட ஸீமா:" என்ற விஶேஷணத்தால் லோகாலோக பர்வதத்தோடு திவ்யாஸ்த்ராக்நிக்குள்ள ஸாத்ருஶ்யமும் நிர்வஹிக்கப்படுகிறது.

மூர்த்தி எங்ஙனேயிராநின்றதென்றால்; பெரிய சிகரத்தையுடைய மேருமலையைத் தன்னிடையே தரித்துக்கொண்டும், தீவு, காடு, முதலியவற்றை யுடைத்தாயும், திருவனந்தாழ்வானுடைய திருமுடியின்மீது உள்ளதுமாயிராநின்றது; ஸ்ரீஸுதர்ஶந நேமியும் அங்ஙனே யிராநின்றதோ வெனில்; ஆம்; நேமிமத்யத்தில் ஸுதர்ஶந புருஷன் எழுந்தருளியிருப்பதானது மேருமலை திகழ்வதொக்கும். அப்புருஷனுடைய பருத்த புஜங்களானவை அம்மேருமலையின் பரிவாரஸ்தாநீயமாம். நாபியென்கிற அவயவம் த்வீபம்போன்றுள்ளது; அரங்களானவை காடுகள் போன்றுள்ளன; இனி ஶேஷ

ஶீஷ்ட்ராஸநஸ்தமும் ஒக்கும்; ஸவித்ருமண்டல மத்யத்தில், அப்படிப் பட்ட ஸந்நிவேஶம் ஶாஸ்த்ராந்தரங்களிலும் ப்ரஸித்தமிறே. இப் படிகளாலே ஸூர்யனின் ஸஞ்சாரஸ்தானமாயிராநின்றதாய்த்து மேரு· ஸூர்யனையச்சுற்றி லோகாலோகமென்னும் பர்வதவிசேஷம் வி ளங்குவதும், அம்மலையில் * இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறி யாத ஒரு பாகமுள்ளதும் புராணப்ரஸித்தம். திவ்யஸ்தாநஸ்திக்கு அம்மலையோடு ஸாம்யம் ஸம்ப்ரோக்ஷத்தாலே வரக்கடவதத்தனை. ·திநகரகிரணை: அஸ்ப்ருஷ்ட ஸீமா யஸ்யஸ:' என்கிற விக்ரஹம் உபயபக்ஷத்திலும் ஒக்குமாகிலும் பொருளில் வாசியுண்டு. பர்வ தபக்ஷத்தில் ஸீமாஶப்தத்திற்கு ஸ்தலமென்று பொருள்; ஸூர் யகிரணங்களாலே பார்க்கப்படாததொரு இடத்தையுடையது அது. திவ்யஸ்தாநஸ்தியோவென்னில்; ஸூர்யகிரணங்களால் காணப்படாத எல்லையையுடையது; ஸூர்யகிரணங்களாலும் எல்லைகாணமுடியாத தென்றபடி. உத்தமஸ்தாநம் ஸமீபஸ்தமென்றால் அதவே க்ஷயாவ்யக்தஸ்தாநம் என்றதாமிறே.

இப்படிப்பட்ட ஸவித்ருமண்டலஜ்யோதிஸ்ஸானது உங்களுக்கு நித்யஸந்தோஷப்ரதமாகக் கடவதென்றாராயிற்று. ... (௯)

ஶஸ்தம் லோகஸ்ய சக்ஷுர்த்விவிதமபநுதத் கர்ம நேத்ரம் த்ரிநேத்ரை:, ஆத்ருத்யாநாம் சதுர்ணாம் ப்ரியமபிமதம் பக்ஷ தாம் ஷட்குணாட்யம் । ஸத்யாவிர்ப்ரோதிதாஸ்தா பதநவகிரண ஶ்ரேணி ராஜ்யப்ரஸாதம், பாபஸ்யாத்யஸ்தாஜ்ஞாநயவபரிப்ருக்ஷ ஜ்யோதி ரீதிஸ்ஸஹஸ்ரம் ॥ (௰)

லோகஸ்ய ஶஸ்தம் சக்ஷு:	உலகத்துக்கு முக்கியமான கண் போன்றதும்
த்விவிதம் கர்ம அபநுதத்	புண்யபாபரூபமான இருவகைக் கருமங்களையும் போக்கடிப்பதும்
த்ரிநேத்ரை:	முக்கண்ணனை சிவபிரான் வணங்கப் பெற்றதும்

அதாணாம் ஸம்பந்நாம் தாது	நான்கு புருஷார்த்தங்களையும் அளிப்பதும் [விப்பதும்
சுபிரணம் வஞ்சதாம் ஷட்கு	பகைவர்கூட்டங்களை நாசமடை
ஷட்குணாஷ்டி	(ஞானம் சக்தி முதலிய) ஆறு குணங்கள் நிறையப்பெற்றதும்
ஸப்தாசிஷ்டோஷ்டதாஷ்டரவஹ நவகிரண ஶ்ரேணிராஜ்ய தஶாஶாம்	தீயில் காய்ச்சப்பட்ட ஸ்வர்ணத்தினதுபோன்ற புதிய கிரணஸமூஹத்தால் சிவக்கின்றபத்துத் திசைகளையுடையதுமான
ஶதாஶ்ராவயவபரிவ்ருஷ ஜ்யோதிஃ	ஸ்ரீ ஸுதர்சந ஜ்யோதிஸ்ஸானது
வஃ	உங்களுடைய
ஸஹஸ்ரம் ஶதம்	பலபல துன்பங்களையெல்லாம்
வ்யஸ்யாக	தொலைத்தருள்க.

இந்த ஶ்லோகத்தில் 'ஏகம், த்வி, த்ரி' என்று ஒன்று முதல் பத்துவரையிலுள்ள எண்களுக்கும் நூறு ஆயிரம் என்னும் எண்களுக்கும் வாசகமான பதங்களின் விந்யாஸக்ரமம் நோக்கத்தக்கது. இந்த ஶ்லோகத்தைக் கடாக்ஷித்தே ஸ்ரீவேதாந்த தேசிகனும் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் (5) 'ஏகொத்விதோஷ்டாதஶ்ரதிய ஷட்வதார விஷ்கம்ப ஸப்தஸ்வரஹஸ்ர ஷாட்குண்ய ஶ்ரீ ஸப்தஸப்தமதிரணிகோடி ஸம்ஸேநவாப்தா। தேவோதவேஜகா ராஜீவ்யஸ்த நயநாநா நிதி ஸாஹஸ்ரம் ஜேஷ விஜிதஷுக்கொதி விஷய் தஶ யம் விதஸம் தேவ்யாதயோத:॥" என்ற ஶ்லோகத்தை யருளிச்செய்தார். இவர் ஆயிரத்தோடு நிறுத்தினார்; அவர் அதற்குமேலும் பேசினார் என்று வாசி காண்க.

இதில் " சுபிரணம் வஞ்சதாம் ஷட்கு" என்றவிடத்தில் ஐந்து என்ற எண்ணுக்கும் "நவகிரணஶ்ரேணி......" என்றவிடத்தில் ஒன்பது என்ற எண்ணுக்கும் பொருள்வகையில் தோற்றமில்லையாகிலும் ஶப்தஶக்தியிலே ஶப்த ஸம்வ்ருத்தி உண்டாகுமென்கிறவத்தனையே விவக்ஷிதம்; திருவெழுகூற்றிருக்கையிலும் இப்படியே யிறே காண்கிறது.

[த்³விவித⁴ம் கர்ம க்ஷபணாதக] புண்யபாபரூபமான இருவகைக் கருமங்களையும் தொலைப்பது என்கை; பாபத்தைத்தான் தொலைக்கவேணும், புண்யத்தையும் தொலைக்கவேணுமோ வென்னில்; ஆம்; பாபம் நரகாவஹம்; புண்யம் ஸ்வர்க்காதி க்ஷுத்ரப²லாவஹம். ஒன்று இருப்புவிலங்கு; ஒன்று பொன்விலங்கு. "ததா³ வித்³வாந் புண்யபாபே விதூ⁴ய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்னும் ஶ்ருதிக்கு இருவினைகளும் தொலையவேணும்: "சார்ந்த இருவல்வினைகளும் சரித்து" என்றார் ஆழ்வாரும்.

[ஶதாங்கா³வயவவரிஷ்ட²ஜ்யோதி:] "ஶதாங்க³: ஸ்யந்த³நோ ரத²:" என்ற அமரகோஶத்தின்படி ஶதாங்க³ஶப்³த³ம் ரத²வாசகம்; அதனுடைய அவயவங்களில் [வரிஷ்ட²ம்] சிறந்தது—சக்கரம். [ஜ்யோதிஷ்ஷஷ்டம்]. "ஜ்யோதிஷ்டோமாதிகாம்யாஸ்ஸமா:; ...
வர்கா:। ஶத்ராஸ்த்ராஸ்த்ர பராஜாந்ஷெதா ஜ்யோதயஸ்ஸ்ரதா:" என்று ஜ்யோதிகள் விசேஷித்துச் சொல்லப்பட்டிருந்தாலும் இங்கே ஸாமாந்யம் விவக்ஷிதமென்க... ... ... (௧௦)

உத்³த³ண்ட³ம் யத்³வேத³ண்ட³ம் நிபி³ட³யதி நப⁴:க்ரோட³மாஶாகடாஹீ
ஹ்ராக், ஹம்ஸஸ்ய ஸ்பு²ரத்தாபதூலிதபராபோ ஜிஹ்மத்ரீ
ரஶ்மிவஹ்நிர்த்தி:। யத்தே ஸாபிஷ்டயோஷ்டோ விஸாரபயோர்ந:
க்ஷிப்த்வா கோஶே ஸாக்ஷாத், ரக்ஷந்த்வஸ்துதுஷோஷ்ட ரக்ஷிதா
ஸாஞ்சிதவ்யோஷ்டயோ வ்ருஷ்டயோ வ: ॥ (௧௧)

உத்³த³ண்ட³	(பகைவர் திறத்தில்) மிகவும் தீக்ஷ்ணமான
யத்³வேத³ண்ட³	யானை சில ஸுதர்ஶந கிரணங்களின் பரிவாரமானது
நப⁴:க்ரோட³	ஆகாஶத்தை
நிபி³ட³யதி	நெருக்கா நின்றவளவில்
ஹம்ஸ:	ஸூர்யனவன்

ப்ரௌடதாபஹேதிதப்தவபுஷ:	மிக்க தாபத்தினால் வாட்டப்பட்ட வடிவையுடையவனாய்க்கொண்டு
அம்ப: பிப்ரத்ஸு அப்ரேஷு	ஜலத்தை ஏந்திக்கொண்டிருக்கிற மேகமண்டலங்களில்
அஸக்ருத்	அடிக்கடி அவகாஹித்து
த்யாம் அடதி	ஆகாயத்தில் ஸஞ்சரிக்கிறானோ.
விது:	சந்திரனானவன்
ஶுஷ்யத்பீயூஷோத்ஸ:	உலர்ந்துபோன அம்ருத ப்ரவாஹத்தையுடையனாய்
அபகதமதுகோஶஸ்ய	தேனற்ற தேனடையினுடைய
ஸாம்யம் ஏதி	ஒப்பை அடைகின்றானோ,
அஸ்த்ரப்ரபோ:	திருவாழியாழ்வானுடைய
தே	அப்படிப்பட்டவையாய்
ஶமிதஸாம்வர்த்திகவ்யுஷ்டய:	வர்ஷஸம்ருத்தியைப் பண்ணவல்லவைகளான
ருஷ்டய:	கிரணங்களானவை
வ: ரக்ஷந்து	உங்களைக்காத்தருள்க.

வளரொளிய கனலாழியின் ஜ்வாலாஸமூஹமானது ஆகாஶத்தை அளாவி எங்கும் பரந்தவளவில் அதனுடையதாபம்பட்டு மிகவும் வாட்டமடைந்த ஸூர்யன் தாபஶாந்திக்காக நீர்கொண்ட மேகமண்டலங்களில் அடிக்கடி அவகாஹித்து அதனால் தாபம் தணியப்பெற்றுத் தனது தொழிலைச் செய்ய வல்லவனாகிறான். ஸூர்யனுடைய கதி இதுவாயிற்று: சந்திரனோ வென்னில், [ப்ரௌடதாபஹேதிதப்தவபு: என்ற விஶேஷணம் சந்திரனுக்கும் அந்வயிக்கக்கடவது.] தனது அம்ருதரஸமெல்லாம் ஶோஷமாகப் பெற்றவனாய்த் தேன் அற்ற தேனடைபோலும் நிலைமையை எய்துகின்றான். ப்ரஸித்தேஜஸ்ஸர்களான இந்துஸூர்யர்களை இப்பாடுபடுத்தவல்ல பெருமைவாய்ந்த ஸுதர்ஶந கிரணங்கள் உங்களைக் காத்தருளவேணுமென்றதாயிற்று. [உத்ஸ:—ப்ரவாஹம். வ்யுஷ்டி:—ஸம்ருத்தி,] (கக)

பத்மௌகோ வாபிகாஸு ஶைலநிதம்பதடே கைரிகாத்ரிப்ரபாதஃ, ஸிந்தூரம் குஞ்ஜராணாம் திஶிதிஶி ககநே ஸாந்த்ய ஸந்த்யாப்ரபந்தஃ । பாராவாரே ப்ரவாளோ வநபுவி ச ததா ப்ரேக்ஷ்யமாணஃ ப்ருதக்ஜநைஃ, ஸாதிஷ்டம் வஃ *ப்ரபோதம் ஜநயது த்ராமிடோபநிஷத்தேஜஸாம் ராஶிஃ ॥ (௧௨)

வாபிகாஸு	வாவிகளின் தண்ணீரில்
பத்மௌகஃ	செந்தாமரை மலர்களின் திரளாக[வும்
ஶைலநிதம்பதடே	மலைச்சாரலில்
கைரிகாத்ரிப்ரபாதஃ	தாதுஜலங்களின் அருவி வீழ்ச்[சியாகவும்
திஶிதிஶி	திசைகள்தோறும்
குஞ்ஜராணாம்	திக்கஜங்களினுடைய
ஸிந்தூரம்	ஸிந்தூரப்பொடியாகவும்
ககநே	ஆகாயத்தில்
ஸாந்த்யஸந்த்யாப்ரபந்தஃ	அந்திப்போதை மேகத்திரளாக[வும்
பாராவாரே	கடலில்
ப்ரவாளஃ	பவழமாகவும்
வநபுவி ச	காட்டிடத்தில்
ததா (ப்ரவாளஃ)	பல்லவமாகவும்
ப்ருதக்ஜநைஃ ப்ரேக்ஷ்யமாணஃ	மூடர்களாலே பார்க்கப்படாநின்ற
த்ராமிடோபநிஷத்தேஜஸாம் ராஶிஃ	திருவாய்மொழியானது கிரணஸமூஹமானது
வஃ	உங்களுக்கு

ஸாதிஷ்டம் ப்ரபோதம் ஜநயது நல்ல அறிவை உண்டாக்குக.

திருவாய்மொழியானுடைய ஜ்யோதிஸ்ஸமூஹம் ஸர்வத்ர வ்யாப்தியென்னுமிடத்தை ஒரு உத்ப்ரேக்ஷாமாகப் பேசுகிறார் இதில். வாவித்தடம், மலைச்சாரல், ஆகாயம், கடல், காடு முதலான எல்லா விடங்களிலும் திருவாய்மொழியானுடைய சுடர்ச்சோதிவெள்ளமே வியாபித்துக்கிடக்கின்றது; ஆனால் உண்மைகண்டறியகில்லாத மூட ஜநங்கள் "இவையெல்லாம் ஸாதாரணஜ்யோதிர்வஸ்துக்களேயாம்"

என்று அறுதியிடமாட்டாமல் ப்ரதேசங்களில் ப்ரதேசவைசித்ர்யமாக மயக்குகின்றன: அந்த உக்ரப்ரகாசவர்ணத்தை வாபித்தடங்களில் தாமரைமலர்களாகவும், மலைச்சாரல்களில் காவிநீர்ப் பெருக்காகவும், ஸ்த்ரீஜநங்களிடத்தில் சிந்தூரச் செம்பொடியாகவும், ஆகாயத்தில் ஸந்த்யாஸ்வாஹநிகாப்ரவேசமாகவும், கடலினுள் பவழமாகவும், காட்டிடத்தில் செந்தளிராகவும் மூடஜநங்கள் காணுகின்றனவித்தனை. (உண்மையறியவல்ல யதார்த்ததர்சிகள் இங்ஙனே ப்ரமிக்கமாட்டார்கள்; பத்மம், கைரிகாப்ரவாஹம், ஸிந்தூரம், ப்ரவாளம். முதலானவற்றை ஸாதர்ம்ய ப்ரஸங்க ப்ரஸாரமாகவே காண்பர்கள்—என்பது உள்ளுறை) இஃது அதிசயோக்தி.

த்ருதீயபாதத்தில் 'ததா' என்பதனால் 'ப்ரவாள:' என்றதை அநுஸந்தித்துப் பொருள்மாத்திரம் வேறாகக் கொள்ளத் தக்கது. "ப்ரவாளோ கிஸலயே வீணாதண்டே ச வித்ருமே" என்ற நிகண்டுவின்படி ப்ரவாளசப்தத்துக்குத் தளிரென்றும் பவழமென்றும் பொருளுண்டாதல் உணரத்தக்கது.

"ஸாயிஷ்ணவ: ப்ரமோதா:" என்றும்.....ப்ரபோதா: என்றும் பாடபேதமுண்டு. ப்ரமோத:—ஸந்தோஷம். ப்ரபோத:—சிறந்த ஞானம். [தநுஜத்விஷ:] தநுஜத்விட் என்று எம்பெருமானுக்குத் திருநாமமிருப்பதுபோலவே திருவாழியாழ்வானுக்குமுண்டு. த்விஷாம் ஸவித்ரீம் த்வேஷ:; ஸ வாஸவ ராசி: ப்ரதி விக்ரஹ:. அதவா—த்விஷாம் ஸமூஹ: த்வைஷ்டி; தஸ்ய ராசி: என்பாருமுண்டு: ஸமூஹத்தினுடைய ஸமூஹம் என்பதனால் பாஹுள்யாதிசயமே தோற்றும். ... ... (கஉ)

ஹா நோ! ஹா நோ ததீய ஸமாதி காலாநிலீகு! ஹே காந்த தேஜ:, தாரா:! ஸ்வாஸ்ராதயீரோஸ்வத்ந! ந ஸத்த: ப்ரேமப்ரௌட்ரோத்தாவீரு:!! ஸம்ஸ்தீதம் நஸ்ஸ்வா யதாதயஸமேய வக்ராராஜாம்ஸவஸ்து, யாஷ்டாகம் ப்ரளயதாவப்ரஸவஸ்மஹா வக்ரோய க்ருத்ராஷ்ட்ர (கங)

யதீயோதயவேலாயாம்	எந்த ஸுதர்ஶநகிரணங்களின் உதயகாலத்தில்
நபஸ்யா:	ஆகாசத்திலுள்ள ஜ்யோதிஸ்ஸமூஹாதிகள்
'ஹே பானோ! த்வதீயா பா: நாவபாஸதி'	'ஓ ஸூர்யனே! உனது தேஜஸ்ஸானது (ஸுதர்ஶந தேஜஸ்ஸின் முன்னே) விளங்கவில்லை (என்று ஸூர்யனை நோக்கியும்)
'ஹே சந்த்ர! தே தேஜ: க்வ?'	'சந்திரனே! உனது தேஜஸ்ஸு எங்கே?' (என்று சந்திரனை நோக்கியும்)
'ஹே தாரா: தூராஸ்த'	'நக்ஷத்திரங்களே! தூரத்தில் நில்லுங்கள்' (என்று நக்ஷத்திரங்களை நோக்கியும்)
'அக்நே! ஸப்யோஸி'	'அக்நிபகவானே! சப்பையாய்விட்டாயே!' (என்று அக்நியை நோக்கியும்)
'ஹே வஜ்ராக்நிஜ்யோதி:!	'ஓ வஜ்ராக்நியினது தேஜஸ்ஸே!
பவத:	உனக்கு
ஸ்வாதந்த்ர்யம் ந	தனித்து விளங்கக்கூடிய ஸ்வாதந்திரியமில்லை (என்று வஜ்ராக்நி தேஜஸ்ஸை நோக்கியும்)
இத்தம் ஶம்ஸந்தி	இவ்வாறாகச் சொல்லுகிறனரோ,
தே	அப்படிப்பட்ட பெருமைவாய்ந்த
சக்ரராஜ ஸம்பவ:	திருவாழியாழ்வானுடைய கிரணங்கள்
யுஷ்மாகம்	உங்களுடைய
ப்ரபலதாப ப்ரபவ பவ ருஜ ஸமக்ராய	ப்ரபலமான தாபத்ரயாதிகட்கு உத்பத்திஸ்தானமாகிய ஸம்ஸாரமாகிற நோய் தீர்வதன்பொருட்டு
க்ரமதாம்	பராக்ரமிக்கட்டும்.

கீழ் ஏழாவது ஶ்லோகத்தில் ப்ரதிபாதித்த அர்த்தத்தையே ப்ரணாலீபேதத்தாலே இதிலும் அருளிச்செய்கிறார்.

திருவாழியாழ்வானுடைய கிரணங்கள் கிளரும்போது, ஆகா ஶத்தில் திவ்யவிமானசாரிகளான தேவஸமூஹங்கள், ஸூர்யன் சந்திரன் முதலிய தேஜஃபதார்த்தங்களை நோக்கி இங்ஙனே சொல்லுகிறார்களாம்:—அப்பா ஸூர்யனே! உனது ஒளி விளங்கமாட்டாமல் மங்கிப்போயிற்றுக்காண்; அப்பா சந்திரனே! உன் தேஜஸ்ஸு எங்கே புக்கொளித்தது? நக்ஷத்திர கணங்களே! இனி நீங்கள் கடக்க நிற்கவேண்டுமத்தனை; ஓ அக்நிதேவனே! உன்னை நாங்கள் பெருமதிப்பனாக நினைத்திருந்தோமே; ஒளியற்றவனாய் சப்பையாய்விட்டாயே!; ஓ வஜ்ராக்நிதேஜஸ்ஸே! நீ ஸுதர்ஶநஜ்யோதிஸ்ஸில் லயித்து உருவழிந்துபோகும் பதார்த்தமாய் விட்டாயேயன்றி ஸ்வதந்த்ரதேஜோவஸ்து அல்லைகாண்; என்று நின்றார்கள் வஸ்துதஃ இப்படி சொல்லுகிறார்களோ வென்னில்; சொல்லாவிடினும் இங்ஙனே சொல்லவேண்டும்படியான நிலைமை விளைகின்றதென்னையிலே தாத்பர்யம். அப்படிப்பட்ட ஸுதர்ஶந கிரணங்கள் உங்களுடைய ஸகல து:க்காரணமான ஸம்ஸாரரோகத்தைத் தொலைக்கக்கடவன வென்றதாயிற்று. இரண்டாம் பாதத்தில் "தாரா: ஸ்பாராக" என்றும் பாடம் வழங்கும். அப்போது, (கவி, ஸ்ஃ,) ஸ். என்று ஔசித்யவைஷம்யநிர்வாஹமாம். அதிற்காட்டிலும் ஔசித்யவைஷம்யநிர்வாஹமேபொருட்சேர்த்திக்கும் அக்ஷராநுப்ராஸரீதிக்கும் ஒக்கும். பெரியோர் ஓதும் பாடமும் இதுவே. ஸமயி—ஸ்தாக, ஸ்த, ஸ்த. என்று நிர்வசனம்.

ஜ்யோ கணைர்க்ஷா தர்ஶநாஞ்ஜநாரிவித்ராவணைஃக்ஷிப்தா
ஸ்வப்நாந், வீஷ்ணாவதீர்ஷு நிஜஃஸப்ரஷிதாந்ததாஸ்ரவே
நாஷ்டிதே, மாலா வஸ்துக்ஷுஷ்தஃபரிஷ்தாரம் ப்ரஶ்ரீதா
நாம் தர்ஶநாஃ, ஐக்யம் ஸ்மரோகரஷ்ட்ரநாஶநதவேஸ:
ஸாந்த்யாநாம் தத்நாது ॥ (கச)

ஜ்யோதிரைஶ்வர்யாணாம் ஶத்ருஸ்த்ரீகளுடைய [அஸுர ராக்ஷஸமாதர்களுடைய]

கர்ணேஷு	காதுகளில் (மங்களாலங்காரமாக அணியப்பட்டிருந்த)
தூ₃ர்வாங்குராந்	அறுகம்புற்கதிரை
ஜக்₃த்₄வா	தின்றுவிட்டும்
ஸ்வர்யோஷிதாம்	தேவமாதர்களுடைய
சக்ஷுஷு	கண்களில் (பெருகிக்கொண்டிருந்த
அம்பு₃:	நீரை [த
பீத்வா	குடித்துவிட்டும்
ஸ்வைரம் யதா₂ ததா₂ சரந்த்ய:	தருமநெறி வழுவாமல் திரிகின்றவையாயும், (பசுக்களின் பக்ஷத்தில்) 2. கானகளோடுகூடத்திரிகின்றவையாயும்
ஶ்ரீஶௌரேண ஸ்வயமேவ	ஸ்ரீசௌரியான எம்பெருமானாலே
அநுக₃தா:	பின்செல்லப்பெற்றவையாயும்
ஶ்ரிதாநாம்	அடுத்தவர்களுக்கு
வரம் க்ஷீரரஸம்	சிறந்த க்ஷீரரஸத்தை (2) சிறந்த மோக்ஷருசியை
து₃ஹாநா:	கறந்து கொடுப்பவையாயும் (2) உண்டுபண்ணுகின்றவையாயும் இருக்கிற
ஸாலோகத்₃வேஷ த்ரிஜக₃த₃வந தமஸ: சக்ரஹஸ்தஸ்ய கா₃வ:	ஸர்வ்வகாரணத்தாலே மூவுலகவிருளையும் விலக்கின திருவாழியாழ்வானுடைய கிரணங்களானவை, (2) தனது கடாக்ஷ வீக்ஷணத்தாலே மூவுலகத்தவரின் அஜ்ஞானாந்தகாரங்களைப் போக்கியருளும் கண்ணபிரானுடைய பசுக்களானவை
வ:	உங்களுக்கு
ஸாந்தாநிகீம் ஶ்ரியம்	தொடர்ச்சி அறாமல் ஶாஶ்வதமாயிருக்கக்கூடிய செல்வத்தை
த₃த₃து	தந்திடுக.

திருவாழிமார்வானுடைய கிரணங்கள் உங்கட்குத் தொடர்ச்சியறாத செல்வத்தைத் தந்திடுக வென்கிறார். "[illegible] ஸூர்யஸ்ய வஸ்வோ [illegible] வவஸோ [illegible] ஸஹஸ்ரரச்மிருஷ்டிரா [illegible]" என்ற நிகண்டுவாசகத்தின்படி கோசப்தத்திற்கு உள்ள பலபொருள்களில் பசு என்ற பொருளையும் கிரணம் என்னும் பொருளையும் ஏககாலத்தில் இங்கே விவக்ஷித்து 'காவ:' என்றருளிச் செய்கிறார். 'சக்ரஹஸ்தஸ்ய' என்னும் பதம் சக்ரம் ஹஸ்தே யஸ்ய என்ற வ்யுத்பத்தியால் கண்ணபிரானையும், 'சக்ரம்ஹஸ்த இவ யஸ்ய' என்னும் வ்யுத்பத்தியால் திருவாழியாழ்வானையும் சொல்லும். (சக்ரராஜ:, சக்ரஸ்ய ஹஸ்த [illegible].) ஆகவே, "சக்ரஹஸ்தஸ்ய காவ:" என்ற வாக்கியத்தில், திருவாழியாழ்வானுடைய கிரணங்கள் என்ற பொருளும் கண்ணபிரானுடைய பசுக்கள் என்ற பொருளும் ஆகும்படியருளிச்செய்கிறார் [illegible]. இரண்டிற்கும் பொருந்த விசேஷணங்களிடுகிற வைசித்ரியைப்பாரீர். [[illegible] ஸுதீக்ஷ்ண [illegible] ஸுப்ருங்கா: பீதவா [illegible]] பசுக்கள் புற்களைத்தின்று தண்ணீரைக் குடித்துத் திரியும்; ஸுதர்சநகிரணங்களும் அப்படியே செய்கின்றன;—அஸுர ராக்ஷஸமாதர்கள் தங்கள் காதுகளில் [illegible] அலங்காரமாக அணிந்துகொண்டிருந்த அறுகம்புல்லைத் தின்றுவிட்டுத் தேவமாதர்களுடைய கண்களிற் பெருகிக்கொண்டிருந்த சோகாச்ருப்ரவாஹத்தைப் பருகிவிட்டு ஸஞ்சாரமாகத் திரிகின்றனவாம். இதனால் பெறப்பட்டதென்னென்னில்; அஸுர ராக்ஷஸர்கள் வியவைகளாம்படி அவர்களது ஸதீக்ஷ்ணைகளையொழித்து, அவர்களால் நலிவுபட்டிருந்த தேவஜாதியின் து:க்கத்தைத் தீர்த்தவை ஸுதர்சநகிரணங்கள் என்றதாகிறது. கழுத்தில் [illegible] தாரணம் போலே காதில் [illegible] அணிவதும் ஸுமங்கலிகளுக்கே உரித்தாகிறது; அது போயிற்றென்றால் வைதவ்யம் வந்ததாமத்தனை. பர்த்தாக்கள் செத்தபின்பு தேவ

மாதர் அழுவதற்கு ப்ரஸக்தியில்லாமையால் அவர்களுடைய கண்ணீர் ஸூர்யகிரணங்களால் பருகப்பட்டதாக உத்ப்ரேக்ஷிக்கப் பட்டது.

“ஸவ்ருஷம்” என்பது ‘சரந்தி:’ என்ற சரணக்ரியையிலே விசேஷணமாக அந்வயிக்கக் கடவது. [ஸவ்ருஷம் சரந்தி:] வ்ருஷசப்தத்திற்கு வ்ருஷபமென்றும் தர்மமென்றும் இரண்டுபொருள். பசுக்கள் வ்ருஷபத்தோடே கூடித்திரியும், ஸூர்யகிரணங்களானவை தர்மத்தோடே ஸஞ்சரியாநின்றன. அதாவது —பாவிகளை நிரஸித்தலும் ஸாதுக்களைப் பாதுகாத்தலுமாம். அதர்மமறியாத எம்பெருமான்படியே இருக்குமாய்த்து இவையும். [க்ஷிதேநவ்ருஷ்டம் அநுகதா:] க்ஷிதிபாலனை எம்பெருமான் பின்செல்லப்பெற்றிருக்கை பசுக்களுக்கும் ஸூர்யகிரணங்களுக்கும் ஒக்கும். இவைபுகுமிடமெங்கும் எம்பெருமானும் புக்கு நிற்கிறானிறே ஸர்வேச்வராவிஷ்கவிசேஷாக||

[ப்ரச்ரிதாநாம் பரத்ராபஸம் தோஹாநா:] “க்ஷீரம் பக்ஷேமோக்ஷஸ்யாத் க்ஷீரமேவஸ்யாதே | பயஸ்யபி தத்வ கோக்ஷு” என்ற நிகண்டுகோசத்தின்படி க்ஷீரசப்தத்துக்குள்ள பல பொருள்களில், பால், மோக்ஷம் என்ற இரண்டு பொருள்கள் இங்கே விவக்ஷிதம். பசுக்கள் தம்மை எய்தினர்க்குப் பாலைத் தரும். இவை முக்தியைத்தரும். “ஸ்வாலோகமாத்ரத்ரிஸந்தஸ:” என்பதை ப்ரயோகஸாமாநாதிகரண்யமாகக் கொண்டு (ஹாவ:) என்பதற்கு விசேஷணமாக அந்வயிப்பர் சிலர். ஷஷ்ட்யந்தமாகக்கொண்டு வக்ஷஸ்தலாவுக்கு விசேஷணமாக அந்வயிப்பது சிறக்கும். [ஸ்வாலோகமாத்ரத்ரிஸந்தஸ: வக்ஷஸ்தலா:] ஆலோகமென்று ப்ரகாசத்துக்கும் பார்வைக்கும் பெயர். எம்பெருமான் தனது கடாக்ஷ வீக்ஷணத்தாலே த்ரிஸந்தஸ்ஸையும் போக்கியருள்பவன்; திருவாழியாழ்வான் ஸ்வப்ரகாசத்தாலே அங்ஙன் செய்பவன். முதல்பக்ஷத்தில் தஸ்யஸ்வாபஹம் அஜ்ஞாநம்.

[ஸாநுபந்தாம் ச்ரியம் ததாது] ஸௌஹ்ருதயத்தோடும் தொடர்ச்சியோடே கூடியிருக்கையாவது விச்சேதமற்றிருக்கை; சாச்வதமான என்றபடி. செல்வத்தை மேன்மேலும் பெருகச் செய்கவென்கை. [ததாது] இந்த க்ரியாபதம் "டுதாஞ் தாநே" என்ற தாதுவில் நிஷ்பந்நமென்று ப்ரமிக்கும் சிலர், 'தத்தாம், ததாதாம், தததாம்' என்றுகொண்டு "தத்தாம்" என்றன்றோ ப்ரயோகிக்க வேணும்; ததாதுவென்னவொண்ணாதேயென்று தோஷம் பண்ணுவர்கள். அங்ஙனன்று; ஜுஹோத்யாதியில் "தத — தாநே" என்றொரு தாதுவுண்டு; அதில் லோட்ப்ரதமைகவசநத்தின் ரூபமாய்த்து இது. ததாம், ததேதாம், ததாது — இதி. "ஸாதிஷ்டம் நநு ஜந்மநோஸ்ய 'ததஸே' நாகம் பதாம் ப்ரபோ!" என்றார் ஆழ்வானும் வரதராஜஸ்தவத்திலே.

இவ்லோகத்தில் கண்ணபிரானுடைய பசுக்களின் பரமாக ஒரு பொருள் தோன்ற ச்லேஷவிந்யாஸம் பண்ணினவிதற்குக் கவியின் கவிதாசாதுர்ய ப்ரகடநேச்சாதிசயமேயாய்த்துப் ப்ரயோஜநம். இங்கே த்வநியா? உபமாலங்காரமா? ச்லேஷமா? எங்ஙனே நிர்வஹிப்பதென்னில்; சிலர் சொல்லக்கூடும்—உபமாவாசகமான இவாதிகள் இல்லாமையாலே உபமாலங்காரம் சொல்ல இடமில்லை; காவ்யாதர்சத்தில் ச்லேஷப்ரகரணத்தில் "ராஜா இதி ப்ராதுர்பவத்ஸு தாராகா: ராஜம் விஸ்ருதா இதி பாஸ்வந்த: யஸ்யாம் தேஜஸ்விந: ஸர்வே ... பத்மிநீ பாஸ்வந்த:॥" என்ற ச்லோகத்தில்போலே சப்தச்லேஷம் சொல்லுவதற்கும் இடமில்லை. "அதவிஸ்ரம்பிகா: ஸ்ரியம் ஸம்ஸக்த: ஸம்க்ஷோபம் பதநஸ்வாஜந நீதா:। ஸர்வேஷாம் ஹித ராமேக்ஷணாநாம் ஸாம்யம் ப்ரதிதிஸந்தி மோக்ஷஸ்ய:॥" என்ற ரகுவம்ச ச்லோகத்திற்போல அர்த்தச்லேஷம் சொல்வதற்குமில்லை; ஸமம், ஸாம்யத்ருஷ்டிவாசகங்கள் இல்லாமையாலே. ஆனபின்பு த்வநியேயாகக்கடவதென்பர்; அங்ஙனல்ல; "ப்ரகரணநியதாபித்யோகாஸ்யாபி ப்ரகரணாவஸ்தாவிசேஷ

யோயமேராவணாத்யா: | ஸத்த்வோத்தா சேஷ்டா: வசி ணத்வீக்ஷிகாஷுஷீலிஷ்ணு"என்ற வேதவசனத்தின்படி சத்தத்திற்போல ச்ரேஷ்டாஜ்ஞமான ஸமயோஸாக்ஷிபாகக்கடவது. ஸவ யாவி சுவுஷாதமான ஒரு சியத்தைத் தோற்றுவித்தல் ஸா ராத்ரிமய ஹேதுவாம் என்ற குதார்கிகஸ்ஷணக ஸர்வ ஹம் இங்கே கண்டனேயம். ... ... (௧௪)

ஸேநாம் ஸேநாம் தேவாநாம் மஹதி ரணமுகே ஸுஸம்ப்ரம் ஸமயம் ஜயந்தீ:, தர்பேணோச்சாவசேச்சாஸ்வாநந்யேந ஸமரவஸ்வ லீலயைவ | விச்வம் விச்வம்பராத்யம் ரக்ஷிதுமவ ஆக்ரமாதா, ஸூர்யயஸ்ய ஸ்ம ச்ருதே ஜயந்தகாந்தி க்ஷாமயாந்தி: || (௧௫)

மஹதி ரணமுகே	பெரிய போர்க்களத்தில்,
ஸேநாந்யே	தலைவர்களோடு கூடினதான
தேவாநாம் ஸேநாம்	இந்திரனது சேனையை
ஸமயம் ஸமயம் ஜயந்தீ:	மிகவும் பயப்படுத்தாநிற்கிற,
